உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௨௪] குரோதன ௵ தை ௴ [பகுதி ௩.
Vol. XXIV. January-February-1926. No. 3.

## தசரதன்குறையும் கைகேயிநிறையும்.

[௮௮-ம்பக்கத் தொடர்ச்சி]

### பகுதி—௫: தசரதன் தவறு.

இனித் தசரதனியலு மிதுபற்றிய அவன்செயலும் சிறிது ஆராய் வாம். முன் தான் கேகயனிடம் செய்த அறச்சூளை அவன் அறவே மறந்தவனாய்ப் பின் இராமனுக்கு முடிசூட முயன்றிருக்கலாம். எனி னும், அவன் தவறுகண்டபோது அவன் அறமனையாள் அவனை நெறி நிறுவுவது அவளுக்கு அறனும் அழகுமாமன்றித் தவறுமா றில்லை. ஆனால், அவன் முழுதுங் குற்றமற்றசிந்தையனாக் கருதற் கிடந்தரா திடர்ப்படுத்துஞ் சில சான்றுகளு மீண்டுக் கருதற்பாற்றாம். முதற் கண், மக்கள்நால்வர்க்கும் வேற்றுமையுணர்வேயுற்றிலாக் கைகேயி போலாது, பெண்ணியல்பால் உளத்தரும்பும் வேற்றுமையுணர்வை அறி வாற்றலால் அறவேமாற்றிய கோசலைபோலாது, தசரதன் தன்மக்களுள் இராமனிடம் அதிகப்பற்றுடையன். இதை வான்மீகர் அயோத்யா காண்டம் 1, 2, சருக்கங்களிற் கவிக்கூற்றாயும், 8-வது சருக்கத்திற் கூனிகூற்றாயும், 11-வது சருக்கத்திற் றசரதன் றன்வாய்க்கூற்றாயும் கூறி வற்புறுத்தியுள்ளார். மகவின்றி நெடுங்காலம்வருந்திய மன்ன வன், முதுமையில் முதற்கிடைக்கப்பெற்றமகனிடத்து விசேஷப்பிரி யம்பாராட்ட வேறுகாரணம்வேண்டாவே. அப்படியிருக்கப் பரதனினும் இராமனிடம் இவன் தந்தையன்பதிகரிக்கப் பிறிதொருநியாயமும் மந் தரைவாயால் வான்மீகர் தந்துள்ளார். இளமையிலேயே பரதனை யவன்

பாட்டன் கேகயனிடம் நெட்டிடைநிற்க விரும்பிவிட்டுவைத்த கைகேயி செயலும், விரும்பா அதன்விளைவுஞ் சுட்டிக் கூனிகூறும் இயலழகு சிந்திக்கத்தக்கது. "தாவரங்களிற்கூட அண்மைநெருக்கத்தால் ஒன்றையொன்று தழுவிப் பற்றுடையதாகும். அப்படியிருக்க, அவ்வித நெருக்கத்தாற் சேதனங்களுக்குண்டாம் நேசத்தைச் சொல்லவும் வேண்டுமோ? மன்னவன்பக்கத் திடையறுதிருக்கு மிராமன்பால் அவனுக்கு ஊறுமன்பளவு பரதனிடத் தெழாவாறு, சிறப்பருவத்தே தந்தைக் கவனைச் சேட்படுத்திவைத்ததொன்றே செய்து முடித்தது"*, என்ற மந்தரைவிநயவாக்கு மக்கள் மனப்பற்றின் பண்பும் மூலமும் பகுத்தெடுத் துரைக்குமோருண்மையின் நுண்மை காட்டும். இவ்வாறு இயல்பில்முளைத்து, அண்மைநெருக்கப்பற்றால் தழையும் அரசன் பெருங்காதல், பரதன்பிரியப் பக்கமகலா இராகவனின் இளமை எழில் குணவியல்புகளால் நாளும் காழ்த்து, வயிரமேறி முதிர்வதாயிற்று. காரணமெதுவாயினும், மன்னனுக்கு மற்றைமக்களினும் இராமனிடம் அதிகநேசமும் ஆசாபாசமும் இருந்தது உண்மை.

இரண்டாவதாக, மிதிலையில் மக்கள் மணவிழாக்கண்டு மகிழ்ந்து திரும்பியவுடன், தசரதன் பரதனை வேறு விசேஷகாரணமின்றிக் 'கேகயத்துக்கேசென' ஏவி, விரைந்தனுப்புகின்றான். 'நாமநீ ரயோத்திமாநகர் ..............நண்ணின (புதுமணப்புதல்வர் நால்வ) ரின்பத்துவைகு நாளிடை, .........அண்ணல், அப்பரதனை நோக்கி'......... 'நின்முது தாதை நிற்காணியவிழைவதோர் கருத்தனுதலின், .........கேகயம்புக..........நீ போதியென்றனன்',—என்ற பரசுராமப் படலக்கவிகள், தசரதன் பரதனை நாடகற்றும் பரபரப்பைக் குறிக்கும். வம்பமண வாழ்க்கை நலங் திளைக்கும் இளம்பருவத்தே, சல்லாப மணப்பாயல் குளிராமுன் அதனைச் சுருட்டி மடக்கிச் செருகச்செய்து பரதனைமட்டும் நெட்டிடை போக்கிப் பாட்டன்பக்கலுய்க்க மன்னன் நினைத்ததற்குக்காரணம், பண்டு பலகாலும பழகிய கிழப்பாட்ட னவனைப் பார்க்கவிரும்பியதாக முன் மிதிலையிற் கேட்டுவைத்ததன்றி வேறில்லை. மற்றை மக்களுக்கு மாதாமகரில்லையோ? அன்றி, அவர் தம் பேரரைக்காணிய விழைவாரில்லை கொல்லோ? இராமனும் இளையவனும் அருகிருக்கப் பரதனுமுடனுடைய

*சருக்கம்-8,

னும் புறம்பெயரச் சக்கிரவர்த்தி திருவுளங்கொண்ட தன்மை யென்னே? அன்றியும், சத்துருக்கனுக்குக் கேகயம் மாதுலர்மனையன்றாகவே, அவ னுந் தன் புதுமணப்பாயல்நலத்தை அவ்வளவு விரைவில் வெறுத் தொதுக்கப் பரபரக்கப் போதிய நியாயமில்லை. இவ்விருமக்களையும் மணப்புதுமகிழ்ச்சிக்கிடையே தூரமான கேகயத்துக்கு விரைந்தனுப்ப மன்னவன்கொண்ட விபரீதவிருப்பத்தை வான்மீகரும், பாலகாண்டம் 77-வது சருக்கத்திற் குறித்திருக்கின்றார். "பரதர் இருந்தால் இராம பட்டாபிஷேகத்துக்கு இடையூறுண்டாகுமென்று அஞ்சி, அவரை மெதுவாக மாமன்வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்தப் பயத்தை விலக்கிக் கொண்டு இராமனுக்குப் பட்டாபிஷேகத்தைப் பண்ணிவைக்கப்போகின் றார்"*, என்று கைகேயிக்குக் கூனிவாயால் இதனையே மீண்டும் வான் மீகர் வற்புறுத்திவைத்துள்ளார். அன்னாரை ஆங்கு அன்று கடிது "போக்கியபோரு ளெனக் கின்று போந்தது" என்ற கம்பர் கூனிவாய்க் கூற்றும் இதுவே குறிக்கும்.

இனி மூன்றாவதாக, இதனோடியைந்துளதான மற்றொருசெய்தியும் மறக்கற்பாற்றில்லை. பரதன் நகர்விட்டகன்றதும், தசரதன் தன்னாட்சி யில் இராமனைப் புகுத்தி இறைமைத்துறையிற் பிணைக்கின்றான்; இஃது, அவனை இளவரசாக்குந் தன்விருப்பத்தை வெளிப்படுத்துமுன் தச ரதன் செய்த காரியம்†. சிறிதுகாலம் அபிஷேகமாவது வெளிப்படை யான ஆட்சித்தொடர்பாவது இன்றி அரசியலதிகாரங்களைத் தந்தை சார்பிற் செலுத்தி, உழைஞரையும் குடிகளையும் தான் அறிந்தும் அவருக்குத் தன்னையறிவித்தும் நெருக்கம்பற்றியெழும் நேசத்தொடர்பு செய்துகொண்டபின்னரே, மன்னவன் அவனை முடிசூட்டவேட்குந் தன் னுளத்துண்மையை உற்ற சுற்றத்தவருக்கும் உழைஞருக்கும் தெரிவிக்க லானான். ஆட்சிக்குரிய இராமன் ஆளுநாளெய்துமுன் ஆளப்பழகும் படி பண்ணுவதில் என்ன புதுமை யென்பார்க்கு, பரதனில்லாதகாலமே அதற்குரியதாகத் தசரதன்கருதக் காரணந்தா னென்னேவென்று அவரைச் சிறிது சிந்திக்கக்கேட்போம்.

இப்படித் தான் கருதியபடி இராமன் குடிகள் அரசியலதிகாரிக ளின் அபிமானத்தையடையும்வரை, அவனுக்கு அரசுதருவதற்குள்ள

*அயோத்தியாகாண்டம் 7-வது சருக்கம். †சருக்கம்-77. சுலோகம்-21.

தன் ஆசையைத் தசாதன் மறைத்துவைத்தான். பின் நாளடைவில் அந்நிலை அவனடைந்தானென்றுகண்டதும், வேந்தன் தன் விருப்பை வெளிப்படுத்தி நிறைவேற்ற விரைகின்றான். இது நான்காவதாக நாம் கருதத்தக்கது.

முதலில் இராமன் அரசியற்றுறை பழகுவதற்குத்தான் பரதன் ஊர்ப்பக்கத்தும் இருக்கப்படாதாயிற்று. பிறகு இராகவனுக்கு முடிசூட்டி அரசை அவன்பாற்படுத்தவிரும்புவதாக வெளிப்படுத்திய புரவலன், பட்டாபிஷேகத்துக்கும் பாதனில்லாதசமயமே பொருத்த முடையதாகக் கருதுவானேன்? அதுவே தன் திருவுளமென்பதை அவனே இராமனிடம் ஏகாந்தசல்லாபத்தில் வெளிப்படுத்துவதாக வான்மீகத்தால் அறிகின்றோம். "பரதன் தேசாந்தரம்போயிருக்கின்றான். என்றைக்குப் பரதன் மாமன்வீட்டுக்குப்போனானோ அன்று முதல் உன் அபிஷேகத்துக்குத் தக்ககாலம் என்பது என்கருத்து, அவன் இப்பட்டணத்துக்குத் திரும்பவாாதிருக்கும்வரைதான் உன் பட்டாபிஷேகத்துக்குத் தகுந்த காலம் என்று எனக்குத் தோற்றுகிறது, .........ஆகையால்தான் நாளையே உனக்கு இளவரசபிஷேகம்செய்ய நிச்சயித்திருக்கிறேன்," என்று இதனை வான்மீகர் அவன்வாயிற் பெய்து வைத்துள்ளார்*. முதலிற்றகவும் பதவியுமுடைய பலரையும் அழைத்து இராமனரசெய்துவதிலவர்சம்மதமும் சார்பும் அறிந்துகொண்டு, பிறகு இராமனையழைத்து அத்துணைவலார்கூட்டத்தே அவனைப் பாராட்டி அவர்க் கினியனாக்கி, பொதுமுறையிற் சில நீதிகூறி, அவனுக்கு அபிஷேகம் மறுநாள் நடக்கப்போவதால் அதற்குவேண்டிய விரதாதிகளை யனுஷ்டிக்கத் தூண்டிவிடுத்த தசரதன், யாவரும் போயபின் மறுபடி இராமனையழைத்துவரச்செய்து தனியிருந்து கலக்கலானான். மன்றத்திடைப் பலரறியப் பேசியனுப்பியபிறகு, திரும்பவும் இராமனை வருவிப்பானேன்? வருவித்தாலும் தனியிருந்துபேசவிரும்பும் குறிப்புத்தான் எதுவோ? இவ்விரண்டாவதான தனித்தசல்லாபத்திற்றான், பாதனில்லாமையே பட்டத்துக்குப் பக்குவகாலமெனத் தசரதன் தன் அகங்காந்த கருத்தை வெளிப்படுத்தினதும்.

இதுவுமன்றி, இராமன்முடிசூடும்விழாவைத் தன்குடிகளோடு பிற நாட்டுமன்னவருக்கும் அறிவித்து அவரனைவரையும் வருவித்து அள

*அயோத்தியாகாண்டம். சருக்கம்-4. சுலோகம்-24-27.

வளாவி ஆலோசித்தமன்னவன், கேகயனுக்கும் அவன்பாலுள்ளசிறியன் பரதனுக்கும் அறிவியாததும் சிறிது காரணங்கேட்குங் காரியமாகும். சேய்மையன் கேகயன் என்ருல், இராமாபிஷேகவிஷயமாக முதன்முதல் தன்விருப்பத்தை வெளியிடுமுன்னரே பலவூர்களுக்கும் நாடுகளுக்கும் பத்திரிகைகள்விடுத்து வேற்றுவேந்தரையும் பிறரையும் வேறுவேருக அழைத்துச் சபைகூட்டிப் பேசநினைத்த மன்னவன், கேகயனுக்குமட்டும் தெரிவிக்கவேண்டாமை புறக்கணித் தொதுக்கத்தக்கதில்லை. இதை முதற்சருக்கத்திலேயே குறிக்கும் வான்மீகர், "கேகயனையும், ஜனகனை யும் தூரதேசஸ்தரானதுபற்றி வரவழைக்க அவகாசம் நேராமையால்' அரசன் 'இக்காரியம் நடந்தபின் அவர்கள்பிரியமான இக்காரியத்தைக் கேட்கலாகும்' என்று நினைத்து, அவசரப்பட்டாயினும் அவர்களை வரவழைக்க முயலவில்லை", என்று சமாதானங்கருதி யமைதிகண்ட தாகக் கூறிப்போவார். இச்சமாதானநிறையுரைகளைப் பின் விசாரிப் போம். இதனை ஐந்தாவதாகக் கருதவேண்டியதொன்றெனக் குறித்துக் கொள்வோம்.

இனி ஆருவதாக, நாம் ஈண்டெண்ணத்தகுவது இதுவாம். இராமர் பட்டாபிஷேகத்தைப் புறநாட்டு நட்புவேந்தருக்கும் பிறர் பலருக்கும் அழைப்பனுப்பிவருத்தி அறிவித்து விழவயரவிரும்பும் சக்கிரவர்த்தி, தன் அரண்மனையில் தனைப்பிரியாப் பிரியை கைகேயிக்குமட்டும் அறி வியாததேனோ? இராமாபிஷேகத்துக்குத் தானெண்ணியாங்கு எல்லாம் முற்றுப்பெற்றுமுடியும்வரை மன்னவன் கைகேயிக்கு அதனை மறைத்தா னென்பதை வான்மீகர் விதந்துகூறியுள்ளார். "அபிஷேகத்துக்குச் செய்யவேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்துமுடித்து, அமைச்சராதி யோரனைவருக்கும் விடைகொடுத்தனுப்பி, (இராமனை இரண்டாமுறை யழைத்து ஏகாந்தத்தில் எச்சரித்தனுப்பிவிட்டுத்) தன்மாடமெய்தி யிருந்த தசரதன், 'இனித்தான் நமது நட்பிற்குப் பாத்திரமாய கைகேயி அறிவாள்' என்று எண்ணியவனுய், அவள்மாளிகைக்குள் முதலிற் புகுந் தான்," என வான்மீகர் விசதப்படுத்தியுள்ள இந்தவாக்கியம் அவள் அதை அறியாதபடி வெகுஜாக்கிரதையுடன் தசரதனல் வேண்டும் ஏற்பாடுசெய்யப்பட்டதை வெளியாக்குகிறது. "இனித்தான் இராமா பிஷேகத்தைப்பற்றிக் கைகேயி கேட்கக்கடவள் (கேட்கலாகும்)" என்று ஈண்டுத் தசரதன்வெளியிட்ட திருவுளப்பெருவிருப்பின்குறிப்பினை

விரிக்கவேண்டா. 'ஸ்த்ரீகளில் உன்னிலும் அன்பிற்கிடமானவள் எனக்கு மற்றொருத்தியும் கிடையாது'*, "நீ எப்போதும் எனக்கு நன்மையையே விரும்பும் சுபாவமுடையவள்"†, "உனக்கு இராமன் மகானுபாவனாகிய பரதனோடு சமானமாயிருப்பவன்,............நீ தர்மத்தை உல்லங்கனஞ் செய்யப் பயப்படுந்தன்மையள்"‡, "தேவி! நீ நல்லசுபாவமுடையவள்"$, என்று பலமுறை பலவாறு அவள் உண்மையன்பையும் உளத்தூய்மை புனிதவியல்புகளையும் மனமாரப் பாராட்டி வியக்கும் மன்னவன்; 'வள்ளலிராமன் உன்மைந்தன்' என்று அவள் முன் வழங்குபவன்; அவ்விராமனுக்குத் தான் முடிசூடவிரும்புவதைமட்டும் அவளுக்கு உணர்த்திலனில்லை. அது மட்டோ? கைகேயியினரண்மனையில் அவளோடிருந் திராமனைப் பார்ப்பதையும் அளவளாவுவதையுமே காதலிக்கும் முன்வழக்கமுடைய மன்னவன், சபையில் இராமனுக்குத் தன்னைப்புணர்த்தி நீதிகளும் போதித்தனுப்பியபிறகு மீண்டும் அவனைப்பார்க்க அழைத்தபோது, தாய் கையில் வளர்ந்திலாதவனைத் தான் வளர்த்த அன்னையாம் கைகேயி அறியாமல் தான் தனியிருந்துபேச ஆசைப்படுவானேன்? கைகேயி தன் காதலுக்குரிய பிரியை; தன்னலமே காமுறுங் காதலி; கற்பினாற் றொழுதற்கொத்த தேவி; தன் முழுக்காதற்குரிய இராமனை, மாற்றவள்மகனென்றுணராமல், தானேபயந்த தவப்பயனாக் கருதி மகிழும் மங்கை. இவையனைத்தும் தானே நேரில் நன்கறிந்துவைத்தும், தசரதன் இராமாபிஷேகத்தைச் சபையிற் சொல்லுமுன்னும், சொல்லி மறுநாள் முகூர்த்தமென்று அனைவருக்கும் வெளியிட்டபின்னும் கைகேயிக்கு மட்டும் மறைத்துவைக்கக் காரண மிருக்கவேண்டும்.

இன்னும் எழாவதாக நாம் அறிவதாவது:— கோசலைக்கும் சுமித்திரைக்கும் சீதைக்கும் முறையே இராமன் முடிசூட முகூர்த்தம் வைக்கப்பட்டது உணர்த்தப்படுகிறது. கோசலைகேட்டுத் தானங்கள் வழங்கி, மகனலம்விரும்பி அவனபிஷேகம் இடையூறுபெறாது நிறைவேறுவதற்காக மௌனத்துடன் தன்னிஷ்டதேவதையைத் தியானிக்கலாயினள். அவள் அரண்மனையில் அவளைச்சூழ இராமனுக்கத்தையறிவித்தழைக்கப்பட்ட சுமித்திரை இளையவன் சீதை முதலிய பலரும்வந்து கூடிக்

*சருக்கம் 11. †சருக்கம் 10. ‡சருக்கம் 12. $சருக்கம் 13.

குலாவிக் களித்திருந்தார்கள். இவர்களிடை இராமன், தந்தை தனக்குத் தனித்துச்சொன்ன இதமொழிகளைப் பருகினபின் வந்து, தனக்கினியராய் அங்குக்குழுமியுள்ளார் யாவரொடும் சல்லாபித்து மகிழ்கின்றான்*. இவ்வா றிச்சுற்றத்தார்பலரும் ஊரில் மற்ற எதிலார் அனைவரும் இராமாபிஷேகத்தை யறிவிக்கக்கேட் டுரையாடியிருக்க, கற்பாசி கைகேயியைமட்டும் உண்மையொன்றுமுணராதே பொங்கணைமேற் றனியே தூங்கவைத்ததேனோ? இராமன் பேராக்கப் பெருமகிழ்ச்சிமிகுதியில் யாருமே இத்தேவியை மறந்தார்போலும்! தெருவிற் கலகலப்பையும் திருவிழாக்கோல முழக்கையுங் கண்ட கூனி, தன்னருகுற்ற கோசலைநேசமுடைய ஓர் செவிலியைக் கேட்டுணர்ந்தாள். பிறகு அவள் சொல்லவே கைகேயி முதன்முதல் அறிவதானாள். இராமாபிஷேகத்தை மந்தரைக்குச்சொல்லக்கூடாத தொன்றுயுணர்ந்த அச்செவிலி, தன் சந்தோஷமிகையால் அவசமுற்றுத் தான் அதை மறைக்குங்கடனை மறந்து மந்தரைக் குரைத்ததாக வடமொழிநூலார் விசதமாக்கியுள்ளார்†.

இறுதியாய் இதுபற்றி நாம் கவனிக்கத் தகுவது இன்னுமொன்றுளது. இராமாபிஷேகத்துக்குத் தடையேற்படக்கூடுமென்று அதை விரும்புங் கொற்றவனும் கோசலையும் எதிர்பார்த்து அஞ்ச ஏதோ நியாயமிருப்பதாக வான்மீகவாலாறுகள் விசதமாக்கும். இராகவனோடு தன் இரண்டாவது ஏகாந்தசல்லாபத்திடைச் சக்கிரவர்த்தி கூறுவது இது:— "உனக்கு நாளை இளவரசபிஷேகம் செய்யப்போகின்றேன், இதுமுதல் அதற்காக நீ உபவாஸ விரதாதிகளை அனுஷ்டிக்கவேண்டும். இத்தகைய காரியங்களுக்கு விக்கினங்கள் பல உண்டாம். ஆகையால் உனது நட்பிற்குரியார் ஏமாந்துவிடாமற் சோர்வின்றி ஊக்கத்துடன் உன்னைச் சூழ்ந்துநின்று இன்று எல்லாவிதத்தாலும் பாதுகாத்திருக்கட்டும்."‡ இவ்வளவு முன்னெச்சரிப்புக்கும் பாதுகாவலுக்கும் அவசியமிருந்தாலன்றி, மன்னவன் இவ்விதம் பயப்பட நியாயமில்லை. மறுநாள் பட்டங்கட்டப்போவதாயும் அதற்கு அன்று உபவாசமிருக்கும்படிக்கும் சொல்லுவதற்குத் தனியிடத் திரகசியம் வேண்டாம். இடையூறெதிர்பார்ப்பதாயும், அதுபற்றி உண்மை நட்பாளர்

*சருக்கம் 5, †சருக்கம் 7. ‡சருக்கம் 4.

காவலிற் றநயனை ஸர்வஜாக்கிரதையாயிருந்து தற்காக்கும்படிக்கும் சொல்லும்போதுதான் ஏதோ அந்தரங்கத்துக்கு இடமிருப்பதாக வெளியாகிறது. அயோத்திப்பதியில் அரசனதாண்மனையில் அபிஷேகம் நடக்கப்போகிறது. அதுவரை அரண்மனையிற்றான் இராமன் இருந்து விரதாதிகளை மேற்கொள்ளப்போகிறான். இராமனுக்குற்றசுற்றத்தாரே அவனைச்சுற்றி யிருப்பர். இதற்கிடையே அவன்சரீரப்பாதுகாப்புக்கு அவனுக்கு உற்ற நண்பர்களுள்ளும் ஏமாறவொண்ணுத் திட்பவினையாளரைத் தெரிந்து பொறுக்கி அவனுக் கணுகப் புடைசூழநிறுத்தி, எச்சரிக்கையோடிருக்குமாறேவ ஏது வென்னை? இராமனுக்கு இளவரசுதர விரும்புபவனே தரணிக்கு அதிபதி; பெறுபவனே அது பெறற்குரிய அவன்திருமகன்; அதனையே அமைச்சரும் உழைஞரும் ஆமோதித்துளார். குடிகளோ அதனை அரசனும் எதிர்பாராவண்ணம் உவந்து கொண்டாடுகின்றார். அதற்கென அழைத்துவந்தோர், வேந்தரும் பிறரும் வேறுகூறிலர். கோசலையும் மருகியும் சுமித்திரையன்ன சுற்றத்தாரெவரும் மகிழ்ந்து வாழ்த்தலாயினர். இலக்குவன் உவகையால் இறுமாந்திருப்பன். இவ்வாறு ஒருங்கே இவரெல்லோரும் உவகைக் கடலிலிருக்க, இராமன்முடிசூடலுக்கு யாரால் இடையூறு நேரலாமென்று இறைவன் எதிர்பார்க்கலானான். அமானுஷ்யவிக்கினங்களை ஈண்டுத் தசரதன் கருதினதாயில்லை. அது கருத்தாயின், மகன் சரீரப் பாதுகாப்புக்கு இத்தனை எச்சரிக்க நியாயமில்லை. கோமைந்தன் முடிசூடலைத் தடைசெய்ய முயலுவார் சிலருளரென்று எதிர்பார்த்தாலன்றி, இத்துணை அச்ச எச்சரிப்பும் விரிவான ஏற்பாடுகளும் ஏகாந்தத்தில் அரசன் இராமனுக்குச் சொல்லுவானேன்.

இப்படியே, இராமனபிஷேகநற்செய்திகேட்ட கோசலை, அதற்குத் தடையேற்படாதிருக்கத் தெய்வங்களைத் தொழுகின்றாள்: வானுறையுந் தெய்வங்கட்குச் சிறப்பொடு பூசனைசெய்து, இராமாபிஷேகம் எவ்விதப் பகைவராலும் இடையினிற் றடைபெறுமல் ஈடேறட்டுமென்று வாழ்த்தெடுக்கின்றாள். இவ்வாறு தந்தையொடு தாயும் எதிர்பார்க்கும் தடையச்சம் எதன்காரணம் எழுந்ததாகும்? தசரதன் இப்படி நட்பாளரால் இராமன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்படி சொல்லும்போதே அதையடுத்துத் தொடர்பாகக் கூறுவதனுலும், அவன் தன்விருப்பத்திற்கு ஊறு எதிர்பார்ப்பது பரதன்சார்பாயிருக்கவேண்டுமென்பது

தொனிக்கின்றது.' 'உன்னைச் சிநேகிதர் ஜாகரூகராய்ச் சூழ்ந்து சோராமல் நின்று பாதுகாக்கட்டும்' என்று கூறியதனேடமையாமல், அதன் தொடர்பாகவே "பரதன் தேசாந்தரம்போயிருக்கிறான், அவன் அயோத்திக்குத் திரும்பிவராதிருக்குமளவுதான் உனதபிஷேகத்துக்குத் தகுந்த காலமென்று எனக்குத் தோன்றுகிறது"* எனத் தசரதன் இங்குக் கூட்டிமுடித்திருப்பதைச் சிறிது ஆழச்சிந்திக்கின், பரதன்காரணமாக இராமாபிஷேகத்துக்குப் பங்கமேற்படலாமெனப் பார்த்திவன் பயப்படுவதும், அதனால் அவ்வபிஷேகம் முடியும்வரை பரதன்றொடர்புடையார் யாருமே அதை அறியாமலிருக்கத் தான்விரும்புவதும் விளக்கமாகிறது.

இனைய பலவானும், வான்மீகர் விதந்தோதும் பிறவசனங்களானும் விசதமானவற்றை மீண்டுத் தொகுத்துநோக்குவோம். இராமாபிஷேகத்தைப் பரதனுக்கும் அவன்பற்றுடையாருக்குமே தெரிவியாதுமறைக்க மன்னவன் விரும்புகிறான். கோசலைபாதியோர் அதனைக் கைகேயிக்கும், அவள் சீதனச்சேடியான மந்தரைக்கும் மறையாகப் பொதிந்து போற்றுகின்றார். தனதெண்ணம் ஈடேறிமுடிந்தபின்னரே இராமன் முடிசூடலைக் கேகயன்கேட்பது உசிதமெனக்கருதி அவனுக்குத் தெரிவியாமலும், 'நல்ல'னாயினும் பரதனைத் தருவியாமலும், வேந்தன் அதை முடிக்க விரைகின்றான். இது கேகயன்கேட்டு மகிழ்வதொன்றாயின் அவனுக்கு அறிவிக்கப்பொறா அவசரமும், அபிஷேகவிஷயமாகத் தன் எண்ணத்தைத் தான் முதலில் வெளியிட்ட மறுநாளே விரைந்து அதைமுடிக்கும் அரசன்வேகமும், விளங்கவில்லை. பரதனோ ஊரில் இல்லை; கேகயனும் இதைக் கேட்டு மகிழ்வன்; என்றாற் பின் யாரால் எவ்விதத் தடை இதற்கு உண்டாகக்கூடும்? அரசனும் பிறரும் இடையூறெழுமென்று அஞ்சுவானேன்? எதிலர் ஏனையர் யாவரும் அறிந்தபின்னும், கேகயன் மகளுக்கும் அவள்சார்பினருக்கும்மட்டும் இதை முடியும்வரை மறைத்துவைக்க இவரனைவரும் ஆவலுறுவானேன்? இராமனிடத்து இதுபற்றி மன்னவன் மீட்டும் தனித்திருந்து பேசுவானேன்? பரதனைப் போக்கிய பின்னரே இது கருதப்படுவானேன்? அவன் இதுமுடியுமுன் வாராதொழிக என்று அஞ்சி வேந்தன் விரைவானேன்?

---

*சருக்கம் 4.

'பரதன் அரசுவிரும்பித் தூாசையால் வலிந்து அதை வெளவவரு வான், அன்றி அவனையீன்றாள் மகனுக்கு அரசாக்கம் அடைவிக்கு மாசையால் இராமனபிஷேகத்துக்கு ஊறிழைப்பள்' என்று தசரதன் எண்ணக்கூடுமாயின், ஒருகால் அரசனுதியோசச்சத்துக்கும் அவசாத் துக்கும் சிறிது நியாயம் எழலாம். ஆனால், கைகேயிக்கு இராமனிடத் துள்ள உண்மைப்பற்றும், நிகரற்ற நிலைத்த தூயகாதலும் கம்பர்கவி களால் மேலே நிறுவப்பெற்றது.* தசரதனுமே அதைப் பாராட்டிப்பேசு வதை வான்மீகர்வற்புறுத்த மேலேகண்டோம்.† பின்னும் தசரதனே கைகேயியைப் பார்த்து, "உனக்கு உயிர்வாழ்விலும்சிறந்தவனாயிருக் கும் இராமன்,"‡ "இராமன்தான் எனக்கு மூத்தகுமாரன்" என்று பலதடவைகளில் நீயேசொல்லுபவள்,"§ எனப் பேசுகின்றான். இன்னும், இவள் தன்பால்வைத்துள்ள மெய்யன்பின் நெருக்கையும் பெருக்கத்தை யும் இராமனே சீதையிடம் பாராட்டி வற்புறுத்துகிறான். "கைகேயி எனக்கு இதத்தையே விரும்புந் தன்மையள்; என்னிடத்தில் மிகுந்த விருப்பமுடையவள்.........உலகத்தில் மேன்மையேவிரும்பி உயர்வுள்ளவள்".‖ "எனக்கு நன்மைசெய்யவிரும்புபவளும், சமர்த் தையும், நான் ஆக்கம்பெறுவதில் அபிலாஷையுடையவளும், எனக்கு அன்னையுமாயிருக்கும் கைகேயி, தன் கணவன்கருத்தறிந்து உவகை யுடன் எனக்கு அபிஷேகத்தை நடத்திவைக்க அரசனைத் தூண்டிக் கொண்டிருப்பாள்" என்று இராமன், மாற்றன்னைமனையிலிருந்து சுமந்திர னழைக்கவந்தது கண்டு சந்தேகித்த சீதைகுறிப்புணர்ந்து, கைகேயிபண்பையும் தன்பால் அவளுக்குள்ள பக்ஷத்தையும் கணவு னிடமுள்ள கற்புமேம்படுகாதலையும் இவ்வாறு விசதமாக்கினான். இன்னும், இராமாபிஷேகத்திற் கைகேயிக்குள்ள உண்மையுவகையைக் கழ்ந்து 'தாய்கையில்வளர்ந்திலன், தவத்தா லிவனைவளர்த்தவள் கேக யன்மாது' என்று பேசிய ஊரவர்மாற்றமும், தனிச்சல்லாபத்திற் காதலன் தன்பெயர்தருமெனுங் குறிப்பால் "என்னின்னுயிர்மென்கிளிக் கியார் பெயரீகென்மன்ன?" என்ற சீதைக்கு, "மாசறு கேகயன்மாது என் அன்னைதன்பெயராகென"—இராமன் அன்பினோடு அந்நாட் சொன்ன

*மந்தரைசூழ்ச்சி-கவி. 47, 51, 52. †சருக்கம்: 7. சுலோகங்கள் 31-36; சருக்கம்: 8. சுலோகங்கள் 11-19; சருக்கம் 11 முதல் 13. ‡11-வது சருக்கம். §12-வது சருக்கம் ‖அயோத்தியாகாண்டம்; சருக்கம்: 16. சுலோகம் 10-19).

மெய்ம்மொழியும், இராமன் கைகேயி இவர் ஒருவர்மேல் ஒருவர் வைத்துள்ள உண்மைக்காதலின்வண்மையைக் காட்டும். தசரதனைப்போலவே இராகவனும் இவளுக்குள்ள இராமாபிமானத்தைப் பலவாறு பாராட்டியிருப்பதோடு, கைகேயி "தர்மத்தை உல்லங்கனஞ்செய்யப் பயப்படுந்தன்மையள்"—என்ற தன் தந்தைகருத்தையே "உலகத்தி லுயர்நெறியிலேயே விருப்பமுடையவ ளிவ"ளெனத் தன் மனைவியிடம்கூறி, இவள் அறவியலை வலியுறுத்துகின்றான். இவள் 'மாசற்ற' மனத்தூய்மையையும், நேரற்ற இராமாபிமானத்தையும் நினைத்தே, "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?" என்றவள்வாய்ப் பெய்துவைத்ததோடமையாது கம்பர், "வேற்றுமையுற்றிலள்...," என்ற தன் னழகியபாட்டிற் கவிக்கூற்றாயிவ ளீடிலாப்பீடுபேணி விளக்கிவைத்துள்ளார்.

இனிப் "பங்கமில்குணத்து"ப் பரதன்பெருங்குணத்தைச் சங்கிப்பாருமுண்டோ? அரசனு லேவப்பட்டு, மாதுலன்மனை மேவிக் கேகயமன்னனாற் சகலசத்காரமும் உபசரிப்பும் விரும்பிய விரும்பியாங் கெய்தி யனுபவிக்கும்பெற்றியு முற்றதோடு, அவன் பெருங்காதலும் பெட்பொடுபேணும் பிரியமும்பெற்று வாழும் பரதன், அப்பெருவாழ் விடை யதை மகிழாமல், "தந்தை வயோதிகர், அரசியற்பாரத்தைச் சுமக்கமுடியாமற் றளர்ந்திருப்பவர், அவர்பக்கம்விட்டகலா தவருக்குப் பணிவிடைசெய்யவேண்டு மிக்கால மிங்கு வீண்கழிகின்றதே," என்றனவரதம் தன் பரிவுடைச்சிந்தையி னினைந்து பரிதாபப்படுவதாக வான்மீகர் கூறுகின்றார்.* இதனு லிவன பிதுர்பக்தி விகசிக்கிறது. இவ னிறைகுணத்தவன் என்பதை யிருபெரும்புலவரும் தசரதன் வாயால் விளக்கியுள்ளனர். "உன்தம்பி பரதன், சான்றோர்நெறியிற் சால நிலைத்த வுள்ளத்தன்; உன்னை யநுசரித்தேநடக்கும் தன்மையன்; தருமத்திற்றானே தன்மனஞ்செலும் பெற்றியன்; அடியோடு 'ஐந்தவித்து' விளங்கும் ஜிதேந்திரியன்;" என்று மன்னவ னிராமனிடமவனை வாயாரவாழ்த்துகின்றான்.† பின்னுங் கைகேயிக்கவனைக்குறித்து வேந்தன்கூறுவதிது:-"நீ நினைக்கிறபடி பரதன அரசை அங்கீகரிப்பனு? அவன் தருமத்தி லிராமனைக்காட்டிலும் மேலானவனென்று நானுணர்வேன். அறப்பெருந்தகையான பரதன், நீ யாதுசெய்தபோதிலும், இராமனை விலக்கி நாட்டைத் தா னங்கீகரிக்கமாட்டான்," என்று

*சருக்கம் 1. சுலோகம் 3-5. †சருக்கம் 4. சுலோகம் 26.

பரதனைப்பற்றிய தன்னுள்ளத் தூன்றிய வுணர்வை வேந்தன் வெளிப் படுத்துகின்றான்.* "கொள்ளான் நின்சேய் இவ்வரசு,"† என்று, கம்பரு மவன்வாயா லிதேசந்தர்ப்பத்திற் பரதனுயர்குண மனத்தூய்மை களை வலியுறுத்தியுள்ளார். இவற்றாற் றசரதன் பரதனுள்ளக்கிடை நன்கறிவானென்று புலப்படுகிறது. அப்படியிருக்க, அவனில்லாத காலமே இராமாபிஷேகத்துக்கு நல்ல சமயமென்றும், அவன்வந்தா லதற்குத் தடைநேருமென் றஞ்சி வருமுன் முடித்துவிடவேண்டுமென வும் தசரதன் அந்தரங்கத்தி லிராமனிடம் பேசுவதற்கு, அறமற்றதோர் சார்பு தன்னெண்ணமாகலான் அறவள்ளலான பரதன்காரணமாக அது தடைப்படலா மென்று தன்குற்றநெஞ்சிற் றானே யஞ்சலாயினா னென்ப தன்றிப் பிறிதுகாரணம் காண்பதரிது.

அன்றியும், பரதன் பாவமேறாணுப் புனிதமனப்பாங்கை மிகப் பாராட்டி, "பரதன் தருமசுபாவனல்லவா? அதனா லவன் நெறிநின்று அறஞ்சொல்லித் தந்தைதாயரை யாற்றுவான்" என இராம னேகாந்த நிலையிற் றனக்குத்தானே அமைதிகாண்பதாக வான்மீகர் கூறுகின்றார்.‡ இன்னும் காட்டிற்குவரும் பரதனைக் கருத்தறியாது சந்தேகப்பட்டு வெகுண்ட இளையவனுக்கு, இராமன் பரதனியல்புகூறி யமைதிபுகட்டு நயத்தை யுணர்வோம். "எனக்குப் பிராணனிலும் பிரியத்திற்குரிய பரதன், பிராதாக்களிடத்தில் மிகுந்த பிரியமுடையவன்; அவன் நாம் வனம்பெயர்ந்தது கேட்டுத் தந்தைக்குப் பணியாற்றும் தருமத்தை விரும்பி மாதுலனகர் நீங்கி அயோத்திவந்திருப்பான்;......என் பிரி வாற்றாமையாற் புலன்கலங்கி நம்மைப் பார்க்க வருவதல்லால் வேறில்லை; ...எனக் கரசுகொடுப்பதற்காகவே இங்கு அவன் வருகின்றான்; பரதன் மனத்தாலுங்கூட நமக்கு அபகாரத்தை நினைக்க கில்லன்;...... உனக் கரசைக் கொடுக்கும்படி நான் மனமின்றி வாய்மாத்திரமாகச் சொன்னாலு முடனே கொடுக்க இசைவானன்றி வேறுரையான்;"‖ என்றவன் நல்லியல்பும் அறம்படிந்த மனப்பான்மையும் நன்கறிந்த இராமன் எடுத்துரைத்துப் பாராட்டுகின்றான்.

"எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே

*சருக்கம் 12. சுலோகம் 61. †கைகேயிசூழ்வினை கவி 26. ‡சருக்கம் 46 சுலோகம் 7. ‖சருக்கம் 97.

அனைத்திறம்; அல்லன அல்ல; அன்னது
நினைத்திலே; என்வயின் நேய நெஞ்சினால், "
(கிளைகண்டு நீங்குபடலம்: கவி. 44).

" பெருமக னென்வயிற் பிறந்த காதலின்
வரும்;........மண்ணை என்வயிற்
றரும்;—என நினைக்கை.....தவிரத் தானையால்
பொரும் என நினைகையும் புலமைப் பாலதே " (ஷை 45).

" சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை(நீ) அன்னது நினைக்கலாகுமே? " (ஷை 47).

பரதன் போந்தது " ஈண்டு எனைக்காணிய, நீ யிது பின்னுங்காண்டி"—என் றிவ் விடத்திற் கம்பரு மிராமன்வாய்மொழிந்து வைத்துளர். இன்னும், "எத்தாயர்வயிற்றினும் பின்பிறந்தார்களெல்லாம் ஒத்தாற் பரதன் பெரிதுத்தமனாவதுண்டோ?"* என் றிலக்குவனுக் கறிவுறுத் தடக்குமிடத் திராமன பரதனைப் பாராட்டியுள்ள பாட்டு மறிவோம். மேலும், எனக்கபிஷேகமில்லை; "நின்காதற்றிருமகன்" பரதனுக்கே பட்டமென்று வந்து சொன்ன தன் மகன்மொழிகேட்ட கோசலை, அவன் "நிறைகுணத்தவன்; நின்னினுநல்லன்;"† என்றிராமனிடம் பரதனற வியல்புகூறிப் புகழ்ந்ததையும், பின் இராமன் குறித்த எல்லையிகந்து வாராமைகண்டு தீப்பாயமுயலும் பரதனைத் தடுப்பவள்,

" எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்,
அண்ணல்! நின்னருளுக் கருகாவரோ?
'புண்ணியம்' எனும் நின் னுயிர் போயினால்,
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"
(மீட்சிப்படலம்,செய்–232).

என்று தன்னுளங்கசிந்துருகி யாற்றியதையு மறியாதாரில்லையே! இன்னும் பரதன்பின்னொழுக்கமுழுதும் அவனைச் சந்தேகிக்க நியாயமே கிடையாதென்பதைப் பறையறைகின்றதே.

இவ்வாறு வேந்தனும் கோசலையும் இராமனும் பரதனைக் கோசில் அறக்குணக்குரிசிலாப் பன்முறையுங்கொண்டாடக்காணும் நாம், பரதன் காரணமாக இராமாபிஷேகத்துக்கு ஊறுநேருமென்று தசரதனஞ்சவும்

---

*வாலிவதைப்படலம். கவி. 34. †நகர்நீங்கு. கவி. 5.

அவ னில்லாதபோ தனைமுடிக்க வெகுவேகப்படவும், இராமனை அபிஷேகப்பேச்சுவெளியிடப்பட்டபின் அதுமுடியும்வரை சோர்வின் றித் தற்காத்துக்கொள்ளும்படி யவனிடம் தனித்துக்கூறவுங் காரணம் காண்ப தரிதன்று. மகவின்றி நெடுங்காலம் வருந்திய மன்னவன், முதுமையிற் றனக்கு முதற்கிடைத்தமகனான இராமனிடத்திலன்பு மிகுதிவைப்ப தியல்பு. அடிக்கடி யகலப்போகும் பரதனைப்போலாது, அனவரதம் அருகிருந்துவளருமவனிடத் தன்பு தந்தைக்கு வளர்ந்துபெருகுவது மியல்பே. இவ்வாறு பரதனிலு மிராமனிடம் தனக்குக் காதலதிகமென்பதைத் தசரதனே கூறியுள்ளதையும் மேற்கவி களா லறிந்தோம். இப்படி நாளடைவி லிராமன்மீ தன்புகாழ்த்த சிந்தையில், தசரதன் அவனுக் கரசியலாக்கத்தையடைவிக்கவிரும்ப லாவது மியல்பேயாகும். ஆனால், கைகேயிதிருமணத்தி லரசுரிமையை அவளுக்குச் 'சுல்க'சீதனமாய்த் தான் முன் கேகயனிடம் அறச் சூளுடன் வழங்கியதன் உண்மையும், அதன் விளைவியல்புகளும், தசரதன் முற்றும் மறக்கற்பாற்றில்லை. தன் புதுவிருப்பிற்கு முரணாகத் தன் முன்மரபுடைஅறச்சொல்லு மதன்பயன்மூறையு மவன்மனத் திருந் தவனைச் சுடுவதால், தன்னுள்ளமுறுத்துஞ் சஞ்சலத்தைப் பிறருக் குரைக்கவும் அறத்துறைபாற் குறைக்கவு மொல்லாமல், அவன் தத்தளிக்குநிலையை நா மெளிதிலுணரலாகும். தூரிய கேகயநாட்டில் நெடும்பல்லாண்டுகளுக்குமுன் தான்செய்த 'சுல்கப்பிரதிஜ்ஞை' பின் தன்னாட்சியைப் பாதிக்காமல், கற்புறுசிந்தைக் கைகேயிகணவனாகவே தானே சுவாதீனன்போல் அரசுபுரிந்து, ஆக்கத்தோ டாதிக்கமு மனுப வித்துள்ளான். அதுகொண்டு தன்முனூ அறச்சொல்லின்விளைவாற் பின் தன் பிற விருப்பங்கள் பீடிக்கப்படாமல் முடிக்கலாகுமென் றெண்ணலா னான். தன் சூளறச் சுல்கக்கொடையாற் பரதனுக்குப் பிறப்புரிமையாய் விட்ட அரசாக்கத்தை, இராமன்பாற் காதல்மிகையா லவனுக்கெய்துவிக்க விரும்பினான். மிகச் சிலரன்றித் தன் முன் சொல்லறச்சூளை யறிந்தவ ரில்லையென்றுணர்வான். தன்பெருமகளுக்காகச் 'சுல்க'ச்சூள் பெற்று வைத்தவனும், அதைப் போற்றவல்லவனுமான கேகயனோ தூரதேசத் தான். அவ்வறச்சொல்லைத் தான் துறப்பதாயறியி னொருகால் அவன் பரதனுரிமைபேண வருவனாகையா லவனுக்குத் தன்னெண்ணம் முடி யும்வரை தகவலெட்டாதிருக்கத் தசரத னுத்திரப்படுகிறான். கேகய

னுக்குமட்டும் அழைப்பனுப்பாதிருந்தாற் கைகேயி சந்தேகத்திற் கிடனாகும்; கேகயனும் குறைகூறுவான். அவனுக் காளனுப்பாமைக் கோர் வியாஜம்வேண்டும். அஃதவனுடு சேய்மையதாவதிற் சமைக்கப்பட்டது. மிதிலைக்கு அறிவித்துக் கேகயனுக்கு அறிவியாமை விபரீதவுணர்ச்சியை யுடனே விளைக்கும். மேலும், கைகேயிக்குச் சேய்மைபற்றிய வியாஜத்தைப் பொருந்தப் புனைவதற்கு, மிதிலையார்க் கறிவியாமை பொருந்துமோர் கருவியாகும். மிதிலையர்கோன் பின் உண்மையறியுங்கால், தாமதம் தன் மருகனபிஷேகத்திற் கிடையூறுமென்பதுணர்ந்து, தனக்குரையாமையை வெறுக்காமல், தன் மருகனாக்கத்தை முடித்துவைத்த சூழ்ச்சித்திறம்வியந்து அதன்பயன்பற்றி நயப்பதுங் கூடும் எனத் தசரதன் கருதினான். ஜனகனையு மழைத்திலாமைகூறிப் பின் கேகயனுக்குச் சமாதானங்காட்டவு மியையும். விளைவும் பயனுஞ் சீர்தூக்கி, ஜனகனுக்கும் கேகயனுக்கு மறிவியாமல் இளவரசபிஷேகத்தை இராமனுக்கு விரைந்துசெய்வதே தனதெண்ணத்தை முட்டின்றி முடிக்கு முறுதிவழியெனக் கருதி, தசரதன் அவ் விரு சம்பந்திபரசருக்கும் இராமாபிஷேகத்தை யறிவியாமலிருக்கத் துணிந்தான்.

---

## பகுதி — ௬: கோசலைமனக்கோள்.

இனிப் பண்டறிகிழவி கைகேயிசீதனச்சேடியான கூனி கேகயத்தில் அரசன் அறச்சூளறிவளாகவே, அதை மறைக்கவிரும்பும் கோசலையாதியோர் வேந்தன் தன் சுல்கச்சூளறங் கொன்று இராமனுக்கு அரசுதரமுயலுவதை அவளறியாது மறைக்க அவாவுகின்றனர். கைகேயி முன் நேரில் இதையறியாள் என்பது உய்த்துணரலாகும். மணவறையில் மணச்சடங்குக்குமுன் வரனைக்காணல் ஆரியவழக்கன்மையானும், சுல்கச்சூள் கைகேயிக்காகக் கேகயனிடம் தசரதனாற் செய்யப்பட்டதாக வான்மீகர் விசதமாக்குவதானும், கூனிவாயால் அதைக்கேட்டறியும் வரை பரதனுக்கு அரசாமாறில்லையென்று மறுத்து இராமன் அபிஷேகத்தை ஆமோதித்தகோமகள் மந்தரைவாயால் முன்வரலாறுகேட்ட பிறகே அபிஷேகத்தைத் தடுக்க இசைந்துள்ளதானும், ஒன்று அவள் முன் அவ்விவரம் அறிகிலள், அன்றேல் அதனை மறந்தனள், என்பது வெள்ளிடைமலையா விளங்குவதாகும். ஒருகாற் பரதன்பாற்பரிவுடைய பிறர்யாரும் அதையறிந்தவர், இராமனபிஷேகமுயற்சிகண்டு, பரதன்

சார்பாகவரக்கூடும்; அவ்வாறு எதிர்பாராவண்ணம் யாராவதுவருவரேல் அவர்முயற்சியை விலக்கி இராமனுக்கு அபிஷேகபூர்த்தியாக்கவிரும்பியே அவனைச் சோர்வில்தோழராற் றற்காத்துக்கொள்ளும்படி அரசன் எச்சரிக்கலாயினன்.

கோசலையும் இப்பழஞ்சரிதம் அறிந்திருக்கவேண்டுமெனவே தோன்றுகிறது. அல்லளேல், வேந்தனைப்போலவே இவளும் இராமன் அரசெய்துவதற்கு ஊறுநேருமென்று அஞ்சக் காரணமில்லை. இவள் சேடிமார், இராமாபிஷேகத்தைச் சுமித்திரையாதியோர்க்கறிவித்தழைத்தவர், கைகேயிக்கும் மந்தரைமுதலிய அவள்சார்பினருக்கும்மட்டும் அதை மறைக்கவிரும்பார். இராமனுக்கு இளவரசபிஷேகம் பிறப்புரிமை; அதனால் அவனுக்கு அது திட்டமாகச் சித்திக்குமெனத்தெரிந்த கோப்பெருந்தேவிநிலைமைக்குமாறாகக் கோசலை தன்மகனுக்கு அதைக் கூட்டுவிக்கப் பெரிதும் தான் ஆசையும் தாளாண்மையும் உடையவளாகவும், முடிவிற் றன்முயற்சி முற்றுப்பெறுங்காலம் அணுகியதுணர்ந்தபோது தன் அறிவாற்றலால் ஆக்கிய ஆக்கத்துக்கு அவள் தன் அறிவளவில் திளைத்துக் களித்ததாகவும், வான்மீகர் விசதமாகவும் கம்பர் சிறிது விநயமாகவும் சுட்டியுள்ளனர்.* இராமனுக்கு அரசில்லையெனக்கேட்டு அவள் அலக்கணுற்றாற்றியதா வடமொழிப்புலவர் அவளியல்விளங்க வழங்கிவைத்த படிற்றுரைபலவற்றைக் கம்பர் குறைத்து மறைத்தனர். பரதனுக்கு அரசுதர இசைந்த தன்தாதையைக் கொன்றேனும் சிறைசெறித்தேனும் தமயனுக்கு முடிபுனையப்போவதாய்க் கோபவெறிகொண்டுபிதற்றிய இளையவன் பிழைபடுமாற்றத்தைக் கடியாது கோசலை அதனைச் சிறிது செவியேற்குமாறு இராமனையும் தூண்டினதாயும், அதைமறுத்து இராகவன் அறமொழியெடுத்தோதி அறிவுறுத்தியபிறகே அவள் கணவனுக்குத் தான் கற்பறமாற்றுங் கடமையைநினைந்து அதற்கு இசைந்ததாயும், பின் பரதனைச்சந்தித்து நிந்தித்ததாயும் மெய்ம்மறையா வான்மீகர் கூறுகின்றார்† பரதனைப் பாராட்டிப் பேசி, அவனுக்கு ஆசிகூறி, அவன்பட்டாபிஷேகத்தை வெறுக்காமல் இராகவன் வனம்போகாது தன்னோடிருக்கமட்டும்வேண்டினளாகக் கம்பர் கோசலைகுணத்தைச் சிறிதுமாற்றிச் செப்பனிட்டு

---

* வான்மீகி - அயோத்தியாகாண்டம் சருக்கம்-4-20. கம்பர் - மந்திரப் படலம்-மந்தரைசூழ்ச்சிப்படலம். †சருக்கம் 21. சுலோம் 4-24. சருக்கம்-75.

மாற்றேற்றிவைத்துளார். கோசலை மன்னவன் சுல்க அறச்சூள் அறிந்திருக்கவேண்டுமெனச் சுட்டற்குரிய துணைச்சான்று இன்னுமொன்றுளது. இவ்வரலாற்றுண்மையை இராமனே பரதனுக்கு முதலில் வெளியிடுவதாக இருமொழிப் பெருங்கவிகளும் முறையே வலியுறுத்தக் காண்கின்றோம். தனக்குத் தந்தையார் முடிசூடமுயன்றபோது இராமன் இஃதுணரானென்பதே பொருந்தமாகும். முன்னரே பரதன்பிறப்புரிமையைத் தான் அறிந்திருப்பின், "செப்பருங்குணத் திராமன்" தந்தைவிருப்பத்திற் கிணங்கி இத்துணை விபரீதவிளைவுக்கு இடந்தரானன்றோ? அறிந்துவைத்தும் அறத்துறைதிறம்பிப் பரதனுக்குரிய அரசைத் தான் அடையவிரும்பினன், என்பது "தாய்மையுமன்றித் தருமமூம்தழுவிநின்று"னியல்புக்கும் பெருங்குணத்துக்கும் பொருந்தாதன்றே? பின் பரதனுக்கு இதை அவனே பகர்வதால், யார்மாட்டிதனை அவன் கேட்டறிந்தான்? தந்தையொடு தன் பட்டாபிஷேக விஷயமாய்ப் பேசிவந்தபின் நகர்நீங்கும்வரை தசரதனுடன் இராமன் மீண்டும் சல்லாபித்திலன் என்பர் கம்பர். இருவரையும் மூன்றுமுறை சந்திக்கச்செய்த வான்மீகரும், தசரதன் தநயனுக்கு இவ்விவரமறிவிக்க இடம் தரக் காணேம். அதனால் வேந்தன்மூலம் இதனை இராமன் அறிந்தபாடில்லை. கோவிந்தராஜாதி உரைகாரர், சுமந்திராதியரால் இராமன் இதைக் கேட்டிருக்கலாமென்று ஊகிக்கின்றனர். ஆனால், தென்மொழி வடமொழிகளில் மன்னிய இருபெருங்காவியக்கதையும் சுமந்திராதியோர் இதனைச் சொல்லகில்லாமையைத் தெளித்துவைத்திருக்கின்றது.* ஆகவே, பழமையுணர்ந்த தன் அன்னையாலாதல் அன்றேல் அவள்சார்பினராலாதல் இவ்வுண்மையை இராகவன் கேட்டிருக்கவேண்டுமென்று அறியக்கிடக்கின்றது.

கோசலைக்குச் சுல்கப்பழஞ்சரிதம் தெரிந்திருக்கவேண்டுமென்பது இன்னுமொருகாரணத்தாலும் ஊகிக்கலாகும். கைகேயி வரம் கேட்டு இராமாபிஷேகம் தடைப்பட்டபிறகு "முன்னவனரசைப் பின்னவனுக்கு ஆக்குவது முறையன்று" என வசிட்டமுனியும் இலக்குவனும் சித்தார்த்தராதிமந்திரிமாரெல்லவரும் முழங்கவும், குணமணப்படுத்தப்பட்ட கம்பரின்கோசலைகூட (முதல்மகனிருக்க) அரசைப்பின்னவனுக்குக்கொடுப்பது

* அயோத்தியாகாண்டம் சருக்கம் 59, கம்பர்—நகர்நீங்குபடலம்.

"முறைமையன்றென்பதொன்றுண்டு" என்று இலேசாகச் சுட்டிப்போந்த தல்லாமல், அஃது அறமற்றதென்றேனும் பாதனுக்கு அது செல்லா தென்றேனும் சொன்னதில்லை. யாண்டும் தன்னியலிழவாத வான்மீகரின் கோசலையோ, கோபத்தாலும் தாபத்தாலும் அறிவுமயங்கினவிடத்தும், இறைவனைச் சிறிய இலக்குவன் "இன்னுச்சொல்லைத்" தனக்கு இத மெனிற் செவிக்கொளும்படி தன்தநயனைத் தூண்டினளல்லால், இராமன் அரசை இளையபாதனுக்குத் தருவது அறமன்றென்று ஒருவார்த்தை யேனும் அவள்பிதற்றற்பிரலாபப்பிரஸ்தாபமுழுவதிலும் பேசாமை சிறிது சிந்திக்கத்தக்கதாம். பர்த்தாவையும் பாதனையும் பிற பல தூறி நொந்து கூறுமவள் பிறர்போல இதனைத் தவறெனச்சுட்டாமையால், பா தன் அரசுபெறுவது அறமற்றதென் றவள் கருதவில்லையென்றுகொள்ள லாகும். இவ்வுண்மையறியாத இலக்குவனுக்கும் ஏனையருக்கும் பாதன் அரசுபெறுவது தவறுகவேபடுவது இயல்பாகலான் அவர்தம் உள்ளக் கிடையை அவ்வாறே வெளிப்படுத்திய வான்மீகர், உண்மையுணரவல்ல அறிவுடை ளுற்றல்சால் கோசலைவாயில் அனையசொல் லொன்றுங் கொடுத் திலர். பழைய சுல்கவரலாறறிந்தவளுளத்திற் பாதன் அரசெய்துவது அறத்துறையன்றெனத் தோன்றுதாகலானும், முறையெனவே தெரியு மாகலானும் வான்மீகருண்மைக்கோசலை தன் கோப தாபப் பிரலாபத் திலும் அதனை முறையன்றென மொழிந்தாளில்லைப்போலும்.

இவை பலவாற்றானும், பண்டையறத்துறையிற் கைகேயிக்குச் சுல்கசீதனமான அயோத்தியாசு பாதனுக்கே பிறப்புரிமை; அதனை இராமன்பாலுய்க்கவிரும்பிய மன்னவனும் அவன்கோப்பெருந்தேவியுமே தவறிழைக்க விரும்பினவர்; தந்தவ றுறுத்துஞ் சிந்தையராகையால், அவ்விருவருக்கும் இடையூறு எழுமென்ற அச்சமும், பாதன்சார்பின ரறியாமல் இராமாபிஷேகத்தை விரைவில்முடித்துவிடவேண்டுமென்ற வேட்கைவேகமும் கரைகடந்து கைம்மிகுந்தது; எனக் காண்போம்.

---

பகுதி—எ:

## முடிந்தது கடியா முதுமுறைவிரகாத்
## தன்னவாமுடிக்தும் மன்னவன்முயற்சி.

சொல்லறந்தொலைத்து மகவாசையால் ஒருகால் மன்னவன் இராமனுக்கு அரசுதர மனங்கொண்டாலும், பரதனில்லாதபோது இராமனுக்கு அபிஷேகம்பண்ணிவிட்நினைத்தாலும், உரிமையற்ற இராகவனுக்கு அது நிலைப்பதில்லையாகவே அவ்வீண் முயற்சியிற் பிரவேசித்துத் தன்னைப் பாவம் அல்லது பழிக்கு இடமாக்கிக்கொள்வனோ வேந்தன்? என்ற வினா எழலாம். இவ்வினாவை யெழுப்பி, இவ்வளவறியாதானல்லாத பார்த்திவன்செயத்துணிந்த இராமாபிஷேகம் செம்மையறவுரிமை இராமன்பாலுண்மையை வலியுறுத்துமென எளிதிற்கூறி, அறத்துறைக்கு அளவாகும் பரதனும் இராமனும் விதந்துகூறிவிளக்கிய வாலாற்றைப் புறக்கணிக்கவிரைவாரும் சிலர் உளர். ஆற்றலும் அறிவும் ஏற்றம்பயக்கத் தங் காதற்றிருமகனுக்கு ஆக்கமும் புகழும் ஆக்கமுயலும் கோசலையும் கோமானும் குறுகியநோக்குடையரல்லர். "ஆற்றல்சால்கோசலை"யோ "விரியுஞ்சிந்தனை" யுடையள். எந்தனும் ஏற்பனவோர்ந் தெண்ணியமுடிக்கும் விரகுடையான். இருவரும் நன்கு ஆழ்ந்து சூழ்ந்து எட்டநோக்கி ஆவனதேர்ந்து ஆற்றவல்லார். தசரதன் சுல்க அறச்சூளால் இராமன் அயோத்தியரசுக்குரியனல்லன், என்பதை நன்கறிவார். தம் கான்முளையான இராகவன்பால் அனுராகம் மிகவுடையார். அவனுக்கு அரசுரிமையாக்கிவைக்க ஆவல் அளவிறந்துவளரும் உளமுடையார்; "நடந்து முடிந்ததை நன்றெனக் கொள்ளும்"—ஆரியர் தொல்லறத்துறை யிவரறிவார். "முடிந்தபின்னதனைக் கடிந்திகப்பதில்லை," "அறமுறை சிறிது திறம்புவதேனும்" முற்றுப்பெற்றதை முடிந்ததாக்கொள்வதே முறை, என்பது ஆரியர் அறநூல்விதியொன்றாகும். இன்றுவரை இவ்விதி இந்துசமுதாயத்தவர் *வழக்குத்துறையில் †வழக்காற்றில் இருந்துவருகிறது. இதையே ஆங்கிலவழக்கறிஞர் (Factum valet) 'முடிந்தது முறை'—எனும் பெயரால் வாதத்துறையில் வழங்கிவருகின்றனர். இவ்விதியுணர்ந்த இறையவனும் இராமாபிஷேகத்தை அரசுக்குரிமையுடைய பரதன்பக்கத்

---

* வழக்குத்துறை=வியவகாரச்சட்டமுறை (Civil Law). † வழக்காறு=கையாட்சி.

தவரால் இடையூறெழுந்து தடைப்படுமுன் முடித்துவிடமுயலுகின்ருன். முடிந்தபின் அதனைக் கடிந்திட லருமையென்றறிவாணுகலின், "முடியுமுன்னர் அப்பாதன்பண்டையறவுரிமையறிந்தார்வந்து ஆட்சேபித்திடில் இராமனுக்கு அரசு உதவாமலேபோகும்; ஆட்சேபிக்க அவசியமும் அவாவும் உடையவர் அறிந்துவந்து தடுக்குமுன் இராமனுக்கு முடிசூடிமுடிந்துவிட்டாற் பின் அதனைப் பேதிக்க யாரும் முயலார்; முடிந்த முடிசூட்டை முறையெனநாட்டி நிறுத்துவது சுலபமாகும்;" என்றுதெரிந்துள தசரதன் அவ்விதியை ஆதாரவாக்கித் தன்விருப்பத்தை நிறைவேற்றமுயலுகின்ருனென்பதை அவன்வாய்வந்த மாற்றத்தாலேயே வான்மீகர் விளக்கியுள்ளார். *

பரதனையும் கேகயன்முதலிய பரதன்பாற் பரிவுடையாரையும்பற்றி மட்டுமில்லை தயாதனுக்குண்டானபயம்; இராமனைப்பற்றியும் உளதாகும். இவன் பெருங்குணப்பெருமிதமுடையவன். அறத்தை மறத்தலும் துறத்தலும் அறியாச்சிந்தையன். அறக்கடவுளனைய பரதனியல்பைப் பாராட்டி அவன்பால் மதிப்பும் காதலும் மிகவுடையவன். தன்பால் அன்பாலேனும் தவறு நினைத்துழித் தம்பி இலக்குவனையும் தன் தாயையுமே தடுத்து, இடித்து, அறம் அறிவுறுத்தி நெறிநிறுத்த விரும்பும் நேர்மையும் திட்பமும் நிலைத்த சிந்தையன். பரதனே தமயனைத் தந்தையினும் அதிகம்பாராட்டி அன்புசெய்பவன். இராமனுக்குரியதன்றென்று அவனுல் அறமுறையிற் றெளிவிக்கப்பட்டபிறகும், தமயனுக்குத் தருவதற்காவதுபற்றியே தரணி தன்னுடைமையானதற்கு மகிழ்ந்து, அதை அவனுக்கு விரும்பிச்சமர்ப்பித்துவப்பவன். அதனுல், பரதனைப்பற்றி மன்னவன் பெரிதும் அஞ்சக் காரணமில்லை. கைகேயியும் இராமனிடத்து அன்பும் தன்பாற் கற்புநிறைகாதலும் உடையளாகவே, அவளைப்பற்றியும் அரசனுக்கு அச்சம் அதிகம் வேண்டா. அரசு பரதனுரிமையென்பதைச் சிறிதேனும் இராமன் அறிவனேல், பின் அதனை அவன் ஏற்கவொல்லான்; அவனையிணக்க யாராலும் ஆகாது. வைராக்கியமிகுந்த இராமன்குணமறிந்த தந்தை, அவனுக்குத் தன் தவறு வெளிப்பட்டுத் தனதெண்ணந் தடைப்படுமுன் அபிஷேகத்தை முடித்துவிட அவாவுகின்ருன். முடிந்தபின் இராமன் அதை

*அயோத்தி-சருக்கம்-4.

அழிக்கமுடியாமைகண்டு அடங்கியமைவன்: பரதன் அதைப் பெரிது முவப்பன். இறைமைக்கு உரிமைமேற்கொண் டிகலற்குரிய இவ்விருவரும் அமையவே, 'முடிந்தது முறை' யெனும் அறமறியும் பரதன் பாங்கினரும் இராமன்முடிசூட்டைவெறுப்பினும் மறுக்கமுயலார். தன் விருப்பம் இவ்வாறு நிறைவேறி, நிலையும் பெறுவதாகும். பூர்த்திபாகுமுன் பரதன்சார்பினர் அறிந்து தடுக்கநேரின், தன்முயற்சியனைத்தும் பாழாகும். உண்மைவெளிப்பட்டபின், பரதன் இசைவனேனும் இராமன் அரசேற்கச்சம்மதியான். பகிரங்கமாகத் தானும் சொல்லறந் துறக்கத் துணியுமாறில்லை. இவ்வுண்மையை ஊன்றியாராய்ந்து, விளைவும் பயனும் விரும்பிக் காலமும் இடமும் கருதி இராமாபிஷேகத்தைத் தடுக்க வல்லாரறியாமல் வேகத்துடன் விரைவுபண்ணவும், சாமானியரால் ஒருகால் எனைத்தும் இடையே சிறுதடை நேரின் அதனை வலிகொண்டடக்கித் தன்விருப்பத்தைப் பூர்த்திபண்ணவும், வேந்தன் கருதியகாரியமும் அதற்குரிய கருவி கருமங்களும் எண்ணித் துணிகின்றான். தடுக்குந் தகையாளரைச் சேய்மையதாகிய கேகயத்தில் விலக்கிவைத்தும், பிறர் பரிவுடையார் இருப்பினும் அவருக்குத் துணையும் சார்பும் இல்லாதிருக்கத் தன் குடிகளோடுபழகிய இராமனுக்கு வலியும் சூழ்ச்சியும் வழங்கியும், தன்விருப்ப மூட்டின்றி முடிய வழியமைத்துக்கொள்கின்றான். தன் சபைக்குத் தனக்குவேண்டியவரையழைப்பதிற் பலநாட்கழியப் பொறுத்தவன், சபையிற் றன் தன்விருப்பத்தை வெளியிட்டு அவர் சார்பும் துணையும் அறிந்தபிறகு சிறிதும் தாழத்தரியானாய், மறுநாளே யபிஷேகத்தை முடிக்கத் துணியலானான். இவை பலவாற்றானும், மன்னவனுளத்தில் தான் முற்றும் முறைசெய்யவில்லையென்றுள துணுக்கமும், எனைத்தானும் தன்விருப்பத்தை முடிக்கக்கொண்ட துணிவும் வேகமும் ஒருங்குடைமை விசதமாமன்றோ.

---

## பகுதி—அ:

## கோற்றவன் உளக்கிடையும் கேகயர்கோமகள் அறத்துறையும்.

இவையுமன்றி இராமனுக்கு அரசுதருமுயற்சியில் மன்னன் மாசற்ற மனத்தனல்லன், என்பதை இன்னும் பலசெயலும் அவன்வாய்ச்சொல்லுமே விசதமாக்கும். பாதனவருமுன் மூத்தமகனுக்கு விரைந்து முடிசூட்டிமுடிக்கும் தன் பெருமுயற்சியைத் தடுக்க முன்வந்த மனைவியை வாய்கொண்டமட்டும் வசைதூறி வைகின்றான். வெகுளியும் விசனமும் கரைகடந்தலைக்க உளமுளையும்வேந்தன், தன் அறப்பெருந் தேவியை வாய்கயப்புற வைவதோடமையாமல், புழுங்குமனப்புகைவாயாற் பழித்து வெறுத்துச் சபிக்கின்றான். இதுமட்டோ? எவ்வறங் கொன்றும் இறைமையாக்கம் இராமனை யெய்துவிக்கும் தன் துணிவொன்றே துறக்கொணுத் தன் உளக்கிடை, என்பதை வெகுளியால் வசமிழந்த வேந்தன்வாய்வெஞ்சொற்கள் வெளிப்படுத்திநிற்கும். துணைவனது தொல்லைச் சூளறச் சொற்சோர்வு சுட்டலாவதன்றென்று அதனை முற்றும் மறைத்து, கைகேயி தனக்கு அரசன் முன் தந்துள வரத்தை அன்று வழங்குமாறு வற்புறுத்துவதாயினள். தன் பெரு விருப்பத்தைப் பாழாக்கும் அவள்குறிப்புணர்ந்த மன்னவன் தன்பால் அவள்கொண்டுள "கற்புமேம்படு காதல்"மிகையை நன்கறிவனுதலான், முதலில் அவளைத் தன் அறமிறந்த ஆசைக் கிடைநில்லாது இணங்கி யொருப்படுமாறு பல நய வஞ்சநலம் பேசி அவளுறுதியழிக்க முயலுகின்றான். உண்மையிலுநன்றிக் கற்பறங்காழ்த்த காதனிறையாற் கணவனை அறம்பிழைபாதுபேணத்துணிந்த பெருந்தகையாள் உரந் தளராவுளத்தளாவது கண்டு, கையறவால் மனமாழ்கி யுரப்புகின்றான். வாய்மைபேணி வரம்தால் தவிரொணுக் கடனென வற்புறுத்தும் மனையாளுக்கு, "நீ நினைவுறுத்திய என் சொல்லறத்துறவைப் பொருட்படுத்தேன், எதுபற்றியும் என்விருப்பத்தைக் கைவிடேன்," என மன்னவன் வரம் மறுக்கின்றான். "என் உயிரையேனும் விடுவேன், இராமனை விடுவேனே? விடேன்," "நீ களிப்பின்றிச் சோர்ந்திருப்பையாயினும், கோபத்தால் அவிந்துபோவையாயினும், விசனத்தால் நாசமுறுவையாயினும், மற்று உனக்கு எதுநேரினும், எனக்கு அப்பிரியமாக இராமாபிஷேகத்தை நிறுத்த நீ சொல்லுவதை நான் நடத்தவேமாட்டேன்",

என்று அவன்வாயால் அவன்மனக்கிடையை வான்மீகர் பகர்ந்து வைத்தார்*. கைகேயி கோலிய வரக்கொடையை மறுக்கவிரும்பியும் வழிகாணுது உளமறுகும் மன்னவன், வசிட்டமுனிவந்தபோது தன் விருப்பமும் விசனமும் கூறி, இராமனைப் "புனைமாமகுடம் புனைவித்து, ஒன்றும் வனமென் றுன்னுவண்ணம்செய்து, என் உரையும் குன்றும் பழிபூணுமற் காவாய்"†, என்று அவனைத் தன் வேணவா முடித்துவைக்க வேண்டுகின்றுன். இன்னும், கைகேயிக்குச் சம்வாதமுடிவில் தான் சம்மதித்து வரமிரண்டும் தந்தபின்னரும், இராமனைத் தான் அழைத்து வரச்செய்து அவன்வந்து விடைகேட்டவனிடம் தசரதன் கூறுவது இது:-"இராகவா! நான் கைகேயிக்கு வரம்கொடுத்து வஞ்சிக்கப்பட்டேன். அதனுல் நீ என்சொல்லை மறுத்து அயோத்திக்கு அரசனுகி என்னை மகிழ்விப்பாய்"‡ என்று தன் உளக்கிடையை விளக்குகின்றுன். இவைகளினுல் முன் இவன், "கண்ணேவேண்டுமென்னினு மீயக்கடவேன், என் உண்ணேராவி வேண்டினும் இன்றே உனதன்றே?"$ என்று தேவிக்கு உரைத்ததெல்லாம் உளத்துறையாப் பசப்புரை யென்பது தெளிவாகும். சொற்சோராது அறம்பேணும் தூய்மனத் துணிவுடையனேல், முன் சொன்ன சுல்கச்சூளைச் சூறையிடத் துணிந்துசூழான்; தன்னுயிர் காத்த தலைவிக்குத் தானேவழங்கிய வரம்தரமறுத்திடான். பின்னும் மனைவியிடம் "மண்ணே கொள்நீ", "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்" எனப் பரதனுக்கு அரசுதருவதாய் உறுதிசொன்னதையும் வெற்றுரையாக்கி, வேந்தன் இறுதியில் இராமனை முடிசூடிக் கொள்ளத்தூண்டவும், வசிட்டனிடம் இராமனுக்கு எப்படியும் முடிசூட்டுவிக்கவேண்டவும் விரும்பானன்றே? இராமன்பாற் கழிபெரும் காதலால் எண்ணிச்சூழ்ந்த விருப்பவினை தான் எதிர்பாராதவண்ணம் தடைப்படவே கையறவுற்றுச் சிந்தையொடு செய்கையும் திகைத்த தசரதன் மனநிலையை, பரிவுடைய கம்பர் வான்மீகரைப்போல் வெச்சென வெளிப்படுத்தாமற் சிறிது திருத்தித் திரித்துக்கூறியுள்ளார். பரதனுக்காக "மண்ணேகொள் நீ, மற்றையதொன்றும் மறவென்று" அவளைத் தன்பால் ஒருவரத்தைமட்டும் கொண்டு, இராமனை வனம்போக்குவிக்கும் மற்றொருவரத்தை வற்புறுத்திவாங்காதிருக்கும்படி வரமிரந்த மன்ன

*சருக்கம்-12. †நகர்நீங்குபடலம்-கவி-41. ‡34-வது சருக்கம். $ சூழ்வினைப்படலம்-கவி-28,

வன் முடிவில் இராமனுக்கே முடிசூட்டுவிக்க முனிவனிடம்வேண்டுவ தால், அவன் வரந்துறவாவாய்மையின்மையையும் அறந்திறம்புமனத் தவாவின்வன்மையையும் ஒருவாறறியலாகும். இன்னும், இவன் விதுப் பும் வெட்கமும் மாறுகொண்டலைக்கத் தடுமாறுளத்தால் ஒன்றையொன் றெவ்வாது முன்பின் முரண்படமொழிகின்ற மாற்றங்களை வான்மீகர் மறையாமற் றருகின்றார். தன் பெருவிருப்பத்தைத் தடுக்கவந்து வரம் கேட்ட கைகேயிக்கு, முதலில் வெகுளியும் துணிவும் காட்டி வெஞ்சொல் லால் மறுப்பதானன். "என்னுயிர்விடினும் இராமனை நான்விடேன், ........உன்வேண்டுகோளை நடத்தமாட்டேன்," என்று முதலில் அறவே வரம் மறுத்தான். அவன் மறுதலை ஒருதலையன்றென மன்றாடிய மனை வியை வெகுண்டும் பயனில்லையென்றுகண்ட மன்னன், பின் அவளைப் புகழ்ந்து நயந்து நலம்பாராட்டி மனங்குழைவித்து, "உன் காதலனாகிய எனக்கும் உலகத்திற்கும் பாதனுக்குமே பிரியமாக நடக்கவிரும்புவை யாகிற் பாதனுக்குப்பட்டம்வேண்டுவதை விடுவையாக; வரம் இரண்டுமே கேளாதொழிவையாக. அன்றி, வரமே வேண்டினும் உன்வரத்தின்படி நாட்டை நீ வாங்கிக்கொண்டு, அதை நீயே இராமனுக்குக்கொடுத்துக் கீர்த்தியடைவை......... நீ இதைச் செய்தால் எனக்கும் இராமனுக்கும் மற்றெல்லோருக்கும் பாதனுக்குமே பிரியமாயிருக்கும். ஆதலால் அப் படியே செய்வாயாக,"* என்று அவளைத் தன்விருப்பத்துக்கு இணக்க முயலுகின்றான். அதுவும் பலிக்காததுகண்டபின் அறக் கொடு மொழிகளால் அவளை யிழித்துப் பழிக்கின்றான். மறுக்கொணுமையால் இறுதியில் வரத்தை வெறுப்போடு தருபவன், வாங்குபவளை வாய்நாற வைகின்றான். அப்போதும் தன் வாய்தரும் வரத்தைத் தன்கருத்தில் மறுத்திடுங் குறிப்பு, அவனையறியாதெழும் அவன்வாய்ச்சொற்களால் வெளிப்படுகின்றது. "காடேக நான்சொன்னதாகக்கேட்டமாத்திரத் தில் இராமன் மறாது உடன்படுவன். என் சொல்லை உல்லங்கனம்பண்ணி வனம்போகாதிருப்பனாகில் எனக்கு அது மிகவும் பிரியமாகும். ஆனால் அவன் அப்படிச் செய்யானே? தான் கபடமறியாதவனாகவே, என்னை யும் தன்னைப்போற் களங்கமற்றவனென்றே கருதுவான். அதனால் நான்சொன்னவார்த்தையே என்கருத்தைக்குறிப்பதாய் எண்ணுவான். வாய்ச்சொல்லுக்குமாறாக என்மனக்கருத்து வேறென்று தெரியமாட்

*அயோத்தி-சருக்கம்-22.

டான். அவன் வனம்போகாமையே எனக்கு உட்கருத்து, அதுவே என்விருப்பம், என்பது அறிகிலான். அதனால் மனதின்றி மனைவிக்கு வரமெனத் தரும் எனது சொல்லை நிசமென்று நம்பி அவன் வனமேகு வான்,"* என்று தசரதன் அன்று தன் பொய்ம்மையுள்ளம் புலப்படப் புலம்புகின்றான். மறுகுசிந்தையன் மறுபடியும் மனைவியிடம் மன்றாடி மறம்விரும்பித் திண்டாடுகின்றான். தன் உறுமலும் பசப்பும் உதவாமை கண்ட வேந்தன், தன் சொல்லறம்பேண வற்புறுத்துவாளை வாதத்தால் மடக்கி வசப்படுத்தியடக்க எண்ணிச் சூழ்கின்றான். "உனக்குச்சொன்ன வார்த்தை முன்னிட்டுப் பரதனுக்கு அரசுதருவதாயின், இராமாபிஷேகத் துக்கு நான் அழைத்துவந்திருக்கும் மன்னரும் மற்றோரும் என்ன எண்ணுவர் என்று உன்னிப்பார். 'இராமனுக்கு நாளைப் பட்டாபிஷேகம் நடத்தப்போகிறேன்,' என்று நான் சபையிற்சொன்னவார்த்தை பொய் யாகிவிடுமல்லவா?"† என்று கைகேயிக்கு நியாயம் எடுத்துத் தொடுக் கின்றான். "என்சொற் சோராமலிருக்க விரும்புவையேல், இராமா பிஷேகத்தைப் பூர்த்திபண்ணிவைப்பதே நல்லவழி' என்று தன் முன்னறச்சூளை அழிப்பதற்கு, தான் ஆழ்ந்து சூழ்ந்து கூட்டுவித்த அவைக்களத்தே வெளிப்படுத்திய தன் மறவிருப்பச்சொல்லை மாறு காட்டலாயினான். வஞ்சநெஞ்சன் ஏதவாதத்துக்கிடையாமற் பின்னைய வெறுஞ்சொல்லினும் முன்னைய அறச்சூளே பேணல் கடனும் நெறியுமாம் என்று தெளித்த தேவியை வெறுத்துப் பழித்து வெம்பிச் சபிக்கின் றான். "உன்கருத்து ஈடேறப்பெறுவாயாக; இராமன் காடேக நான் இறப்பேன்; பிறகு நீ விதவையாகி உன்மகனோடு நாடாள்வாயாக; ........கோசலை சுமித்திரைகளோடு என்னையும் என்புதல்வரான இரா மன் இலக்குவன் சத்துருக்கனும் மூவரையும் அவலத்திற் றள்ளி நீ சுகமாயிருப்பாயாக;" "பரதன் எங்களைவிட்டு உன்னுடன்கூடித் தேசத் தையும் சுற்றத்தாரையும் மற்றெல்லோரையும் கொன்று சந்தோஷமாக அரசியற்றட்டும்;"‡ மந்திரபூர்வமாக மணவறையிற்பிடித்த உன்கரத்தை நிராகரிக்கிறேன்; இனி எனக்கு நீ மனைவியில்லை; நான் உன்கணவனு மல்லன்; எனக்குப்பிறந்த உன்மகனையும் நிராகரிக்கிறேன்; நீயும் உன் புதல்வனும் எனக்கு ஈமக்கடனேதுவும் இறையளவும் இயற்றே ணுதி."¶ "வசைவெள்ளம் நீந்தாய் நீந்தாய் நின்மகனோடு நெடிதென்

*சருக்கம்-12. †சருக்கம்-12. ‡சருக்கம்-12. ¶சருக்கம்-14.

றன்;"* "சொன்னேன் இன்றே இவள் என் தாரமல்லள், துறந்தேன்; மன்னேயாவான் வரும் அப் பரதன்றனையும் மகனேன்றுன்னேன்; முனி வா! அவனும் ஆகான் உரிமைக்கு"; † என்றான். யாதுசெய்தும் என்ன சொல்லியும் தன்விருப்பம் ஈடேறாமற் றடைப்பட்டதறிந்த தசரதன், வெம்பிக் கனன்று அழலும் மனத்தான், இக்கடும்பழிச் சுடுசொற்களால் தன் வெறுப்பையும் வெகுளியையும் வெளிப்படுத்தலானான். "இராமாபிஷேகம் தடைப்படுமாயின் நான் பிழையேன்,"‡ என்று அவன் வாய்விட்டசொற்கள், இராமனிடத்து மன்னவன் வைத்துள்ள பெருங்காதலேயும் அவனுக்கு முடிசூட்டுவதிலுள்ள பேராதரத்தையும் தெளிவாக்கும். தன் ஆசைக்கு இடையிட்ட மனைவியை வெறுப்பது இயல்பாமேனும், குறையா நிறையுடைக் கோப்பெருந்தேவியை மனைவி யன்றென மணவறம் மறுப்பதேன்? "தருமத்தில் இராமனைவிட மேலானவன் பரதன், தரினும் அரசைத் தான்கொள்ள இசையான்" என்று தானே நன்கறிந்து புகழ்ந்த பாவமற்ற பரதனையும் மாயாப் பழிக்கு ஆட்படுத்தித் தன் மகனன்று எனும் புன்மொழிபுகல்வதேன்? குற்றமில்மனத்துக் கோதில்குணத்தவர் கோபம், என்றும் மாயா வடுத்தரும் வசைமொழிவழிப்புகாது. தவறுடைய தன் பெருவிருப்பம் தடுக்கப்படவே, தன் தவறு நினைந்து வெட்கமும் வேட்கையும் வெதுப்ப உளையும் தசரதனுள்ளக்கனல் அவனறிவைக் கருக்கிப் புன்புரைச்சொற்பொறி பொதுளிய புகைதருவதாயிற்று. தன் நெஞ்சறியச் 'சுல்கச்சூளறம்' பொய்த்தான்: பொய்த்த பின் 'தன்னெஞ்சே தன்னைச் சுடுவதாயிற்று. பொய்யுளம் புழுங்கத் தம் புரைபுகைவாயால் மெய்நிறுவமுயல்வாரை வைது, தங் குறைமறைக்கப் புகல்தேடுவது அறனஞ்சா வஞ்சநெஞ்சரியல்பாம். தன் காதற்கிழவனை அறவழிநிறுத்துங் கற்புக்கடனாற்றுவதையே கருதி, எனைத்தானும் அவன் சொற்சோர்வைச்சுட்டாமற் கணவன்வாய்மையையும் காக்கவிரும்பித் தனக்கு அவன் தந்துள வரத்தை விபாஜமாக்கி அவன் நெஞ்சறி புரைவிருப்பை நிறைவேற்றவிடாது தடுக்கும் தெய்வக்கற்பினளான கைகேயி தூயசிந்தையின் திறத்தைமேலேவிரித்துரைத்துள்ளேன். இதையே வான்மீகரும் இராமன்வாயாலினிது விளக்கியிருக்கின்றார் கைகேயியின்

---

*சூழ்வினைப்படலம். கவி-44. †நகர்நீங்குபடலம்-கவி-50. ‡சருக்கம்-14.

விவாககாலத்திற் றசரதன்செய்த சுல்கப்ரதிஜ்ஞையைப் பரதனுக்குச் சொல்லியபின், "இந்தக்காரணத்தால் நமது தகப்பனரை மெய்யனக்கக் கருதிய கீர்த்திவாய்ந்த உன் தாயார் இரண்டுவரங்களைக் கேட்டுக்கொண்டார்,"* எனத் தன்சிற்றன்னையின் தோமில் தூமனப்பாங்கை இராமனே எடுத்துரைத்துத் தம்பியைத் தெருட்டுகின்றான். இவ்வுண்மையைத் தமயன்வாய்க்கேட்டறியுமுன் தன் தாயைத் தன்பாற் காதல் காரணமாகத் தவறு நபந்துசெய்தவளாக் கருதி, அவளைப் "பழிவளர்த்த செவிலி" எனப் பலபடநொந்து, அவள் 'பழியும் போக்கி'யருளுமாறு இரந்த பரதன் உண்மையுணர்ந்தபிறகு அவளை யாண்டும் பழித்திலாமையும் உய்த்துணரற்பாற்றும் இதுகாறும் சொல்லிப்போந்தவற்றால், "தீவினைநயப்புறுதல்செய்தவன் தசரதனேயாமென்பதும், அவன் சொற்சோர்ந்து அறம் துறவாது அவன்வாய்மையைப் பேணிநிறுத்தும் கற்பறக்காதலாற் கைகேயி மாயாப் பெரும்பழி விரும்பியேற்றுக் கணவன் புகழ்நிறுவ முன்வந்தாளென்பதும், ஐயமற விளக்கமாகுமன்றோ?

[தொடரும்.]

ச. சோ. பாரதி.

---

# மதிப்புரை.

---

இலக்கணக்கோவை:—இது, காமக்கூர்த் தமிழ்வித்வான் ஸ்ரீமத். மு. சுந்தரமுதலியாரவர்களால், தமிழிலக்கணநூலுரைகளிற் காணப்படும் அரியவிடயங்களைத் தொகுத்துச் சூத்திரரூபமாக இயற்றி ஆங்காங்கே வேண்டிய உதாரணங்களும் சேர்த்துப் பதிக்கப்பட்டது. தமிழிலக்கணங்கற்பார்க்குப் பயன்படத்தக்கது. இதன்விலை அணா நான்கு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

கோவூர்கிழார்:—இது, இலக்கணவிளக்க ஆசிரியர்வழித்தோன்றியவரான திருவாளர் சோமசுந்தரதேசிகரவர்களால் வெளியிடப்பெற்றுவரும் பழந்தமிழ்ப்பெருமக்கள்வரலாற்றின் இரண்டாம்பகுதியாகும். இதிற் கோவூர்கிழாரின் காலமும், கல்விமேம்பாடும், அரசியலறிவும் பிறவும் புறநானூறு முதலியவற்றினுள்ள செய்யுள்களைத் தழுவியெழுதப்பட்டுள்ளன. வேண்டுவோர் சோமசுந்தரதேசிகரவர்கள், தமிழ்ப்பண்டிதர், நன்னிலம் என்ற விலாசத்துக்கு எழுதி விலைவிவரமுதலியன தெரிந்துகொள்க.

---

*சருக்கம்-107. சுலோகம்-5.

செல்வக்களஞ்சியம்:—இது, இம் மதுரையம்பதியிலிருந்து ஸ்ரீமத். R. S. பதி அவர்களால் வெளியிடப்படும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்பகுதியிற் பெறற்கரிய மானிடயாக்கை பெற்றவர்கள் அதனை நோயணுகாது காத்து நெடிதுய்க்குமுறைகளும், தேகப்பயிற்சி, மருந்துப்பொருளாராய்ச்சி முதலியனவும், கல்வி கைத் தொழில் வியாபாரம் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும் தெளிவான உரைநடையில் எழுதிவெளியிடப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா ஒன்று. வெளிநாடுகளுக்கு ரூபா ஒன்றேகால்; தனிப்பிரதி அணா இரண்டு. வேண்டுவோர் நூற்பதிப்புத்தலைவர், செல்வக்களஞ்சியநிலயம், மேலக்கோபுரத்தின் உட்புறம், மதுரை என்றவிலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

கம்மபாலன்:—இது, திருத்தங்கலிலிருந்து ஒவ்வொருமாதத்தின் இறுதியிலும் வெளிவருவது. கோயிற்பட்டி தக்ஷிணகம்மமஹாஜன சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமத். R. வேங்கடசாமிநாயுடு அவர்கள் பத்திராதிபராக இருந்து இதனை நடத்திவருவார்களெனறும், இதில், சுகாதாரம் வியவசாயம் வியாபாரம் கைத்தொழில் ஆரம்பக்கல்வி ஒற்றுமை பஞ்சாயத்து முதலியவற்றைப்பற்றிய விஷயங்களும், பொதுச் சமாசாரங்களும், கம்மகுல முன்னேற்றத்துக்கான விஷயங்களும் வெளிவருமென்றும் தெரிகிறது. இதன் வருடச்சந்தா ரூபா ஒன்று. வேண்டுவோர் மானேஜர், கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல், சாத்தூர் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

நச்சினார்க்கினியன்:—ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பத்திராதிபத்தியத்தில் மாதம் ஒருமுறை நடைபெற்றுவந்து இடையே சில அசௌகரியங்களால் நின்றிருந்த இதன் இரண்டாந்தொகுதியின் முதலிரண்டுபகுதிகள் முன்னிலும் சிறிது பெரிய உருவுடன் இப்போது வெளிவந்துள்ளன. அவற்றுள் எல்லோருமுணருமாறு எளிய நடையிற் பலவிடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இனி, ஐயரவர்களின் பெருமுயற்சியால் இது பல நலனும் பொருந்தி இடையீடின்றி மாதந்தோறும் வெளிவருமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா இரண்டு. வெளிநாடுகளுக்கு ரூபா இரண்டரை. வேண்டுவோர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், உரிமையாளர், நச்சினார்க்கினிய நிலயம், 2. ஆணிமுத்தம்மாள் ஸ்டோர்ஸ், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்றவிலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

# பதினெண்கீழ்க்கணக்கு.

சங்கமருவிய நூல்களுள் ஒரு பகுதி பதினெண்கீழ்க்கணக்கு என்பது உலகறிந்ததே—கீழ்க்கணக்கென்பது இன்னதென்றும் அதன் இலக்கணம் இன்னதென்றும் பலரும் காட்டிப்போந்தமையான் அதனைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டப்படுவதொன்றன்று. பதினெண் கீழ்க்கணக்குநூல்கள் தாம் எவையென்பதே ஈண்டு ஆராயப்புகுந்ததாம். எற்றுக்கெனின், பலர் பலவாறுகூறுகின்றார்களாகலின் அந்நூல்கள்தாம் யாவையென அறுதியிடவேண்டியதற்கென்க.

I. முதன்முதலாகத் தொல்காப்பியம், கலித்தொகை இலக்கண விளக்கம் முதலிய பெருநூல்களை அச்சிட்டு உலகுக்களித்த பேருபகாரியான காலஞ்சென்ற சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் கலித்தொகை முகவுரையில்,—

"மதுரைத்தமிழ்ச்சங்கத்தார்முன்னர் அவ்வக்காலத்துப் புலவர் கொண்டுவந் தரங்கேற்றிய நூல்கள் பல்லாயிரமாகும். அவையல்லாமல் அச்சங்கத்தார் தாமாக நமக்கு அருளிய நூல்கள் அனேகம் உண்டு. அவற்றுட் கடைச்சங்கத்தார் அருளியன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பதினெண்கீழ்க்கணக் கென்று மூவகைய. அவை இன்னவென்பது முறையே,—

"நற்றிணை நல்ல.....................வெட்டுத் தொகை"

"முருகு பொருநாறு...................பத்து"

"நாலடி நான்மணி நானாற்பு தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னுஞ் செய்யுட்களான் அறிக. இவற்றுட் கோவையென்றது ஆசாரக் கோவையை. முப்பாலென்றது திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, பஞ்சமூலம் ஆதியபோன்று நாலடிவெண்பாவான் இயன்று அக்காலத்திலே வழங்கிய மூன்று சிறுதரும நூல்களையென்றும் இன்னிலை சொல் என்றது இன்னிலை, இன்சொல் என்னும் பெயரிய இரண்டுநூல்களையென்றும் உத்தேசிக்கிறேன். அன்றேல் ஐந்திணை அகப்பொருட்டுறைத்தாய் ஐம்பது செய்யுளான் மாறன்பொறையனார் இயற்றியது ஒருநூலாக, இவர்க்குக்

கீழக்கணக்குநூல் பதினெட்டாயது எவ்வாறே? இவ்விடர்நோக்கிப்போலுஞ் சிலர் ஐந்திணையை ஐந்தொகையென்று பாடம் ஓதுவர். அன்னோர் நெடுந் தொகையொன்றொழிய வேறு தொகையின்மையிற் சுட்டி சுட்டதென்று நெருப்பிற்பாய்ந்தகள்வனார்போலப் பின்னர் எட்டுத்தொகைக்குநால்காணுது பேரிடர்ப்படுவர். 'இன்னிலையகாஞ்சியுடனேலாதியென்பவே' என்றும் பாட முண்டு. அதனால் இன்னும் இரண்டு குலறவதன்றிக் கணக்குச் சரிபெறாது.

இவ்வாறுகொள்ளாது சிலர் கோவை முப்பால்களை வாதபுரீசராகிய மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவை யாருஞ் சங்கத்தாரைப் பங்கப்படுத்தி அழித்துவிட்ட தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது பொய்யாமொழித்திருக்குறளு மென்று மயங்கித் தடுமாறுப. பெயர்பெற்றவித்வான்களுள்ளுஞ் சிலர் இவ்வாறுமயங்கினது நம்போலியரை மிக மயக்குகின்றது. இவ்விரண்டும் நமது தமிழ்வேத மென்றாவது சிந்தித்தாரில்லை. திருச்சிற்றம்பலமுடையார்கையெழுத்தா கீழ்க்கணக்கின்கீ ழகப்பட்டது!!! இதனை நிராகரிக்க அயற்சாட்சியும் வேண்டு மா? பன்னிரண்டுதிருமுறையையும் ஒருங்குசேர்த்து முப்பதாக்கிவிட்டா ரில்லை!! மேலும், 'நாலடிநான்மணி' என்றற்றொடக்கத்துச்செய்யுள் யாரது? யார்காலத்தது? யாண்டையது? சங்கத்தார்காலத்துச் சங்கத்திருமுன்னர்ச் சங்கப்புலவருளொருவராற் சொல்லப்பட்டதென்ப துண்மையாயின் நாயனார் திருக்குறளின்பின் சங்கம் எங்கேயிருந்தது? இருப்பினன்றே குறளுங் கூட்டிக்கூறப்படும்! நாற்பத்தொன்பதின்மர்புலவருங் கூடி மனத்தாலும் வாயாலும் வாழ்த்திய மாலையின்சாரம் அதனைத் தமது சிறுநூல்களோடு ஒக்கவைத்தற்கருத்தினை யுடையதா!''

என்று எழுதினார்கள்.

II. திருவன் கொ. சீனிவாசராகவாசாரியரவர்கள் இக்கூற்றை ஒருவாறு மறுத்துத் தமது நாலடி முகவுரையில் எழுதினார்கள். அவர் கள் ஐந்திணை யென்பது ஐந்துதிணைநூல்களென்றும், முப்பால் என்பது திருக்குறளென்றும் கொண்டனர்.

பின்னரும் திருவன் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் இலக் கணவிளக்கப்பதிப்புரையில்,

"மகா-௱-௱ ஸ்ரீ கொ. ஸ்ரீநிவாசராகவாசாரிய ரவர்கள், தாம் எழுதிய நாலடியார் நூல்வரலாற்றில் "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்பால் கடுகங் கோவை பழமொழி" என்பவற்றுள் "ஐந்திணை அகப்பொருட்டுறைத் தாய் ஐம்பதுசெய்யுளான் மாறன்பொறையனார் இயற்றியது ஒருநூலாகக் கீழ்க்கணக்குத்தொகை பதினெட்டாய தெவ்வாறே?" என யான் கொண்ட

கொள்கை மாற "ஐந்திணையென்றது திணைகளைப்பற்றிச்சொல்லும் ஐந்து நூல்கள்" எனக் கூறி, ஐந்திணைஐம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலைநூற்றைம்பது இந்நான்கும், அவ் வைந்திணையைச் சேர்ந்தனவென்றும், இவைபோன்றது இன்னுமொன்று இருத்தல்வேண்டு மென்றும் சொற்றனர். கலித்தொகைப்பதிப்புரை எழுதியபின்னர் மேற் கண்ட நான்குநூல்கள் எனக்கும் அகப்பட்டன. ஐந்திணைவிஷயத்தில் யான் கூறியகூற்றுச் சரியன்று என்று ஒத்துக்கொள்வதுமன்றி ஆசாரியரவர்கட்கு என் வந்தனமுங் கூறுகின்றேன். பிறர்சிலரொப்பக் கோவையைத் திருச்சிற் றம்பலக்கோவைஎன்றுகொள்ளாது யான்சொல்லியதுபோல ஆசாரக்கோவை யென்று இவர்கள் உரையிட்டது சாலவும் பொருத்தமுடைத்தேயாம்.

முப்பால் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனரது பொய்யா மொழித்தமிழ்வேதமாகிய திருக்குறளல்ல வென்பதற்கு யான்கூறிய நியாயங் களை முற்றச் சீர்தூக்கியாராயாது "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி" என்னும் பிற்றைநாண்மொழியைச் சங்கத்தார் காலத்து முதுமொழிபோற்கொண்டது ஆசாரியர்பால் ஒரு தவறென்றே இன்னும் வற்புறுத்துகின்றேன். கோவை திருக்கோவையாராகாது ஆசாரக் கோவையாயினாற்போல முப்பாலும் நாயனர்தமிழ்வேதமாகாது நம்மைக்கு இன்னும் அகப்படாத பின்னொரு சிறுநூலேயாதல்வேண்டுமென்பது என் துணிவுமாத்திரமன்று. இதுவிஷயத்தில் யான் கண்டு பேசிய பலமடாதி பதிகள் வித்துவான்கட்கும் இஃதொப்பதென் றறிக.

இஃதெழுதியபின்னர் ஸ்ரீ திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் தமக்கு அகப்பட்டதோர் மிகப்பழைய கீழ்க்கணக்குச்சுவடியில் 'நாலடி நான் மணி' என்னுஞ் செய்யுள் அதிகஞ் சிதைவுபட்டுக்கிடப்பதில் ஐந்திணை யென்பதற்கு ஐந்திணைஐம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழிஐம்பது திணைமாலைநூற்றைம்பது என்னும்நான்குமே உரையிற் குறிக்கப்பட்டிருக் கின்றனவென்றும் முப்பால் என்பது அப்பெயரான் உரையோடுள்ளதோர் தனிநூலாகக் கண்டிருக்கிறதென்றும் எழுதியறிவித்தனர். இஃது என் கூற்றை நன்கு வற்புறுத்துகின்றது. இதனால் "நானாற்பதைந்திணை" என்ற தில் நாலென்னும் அடையை நாற்பது ஐந்திணை என்னும் இரண்டனோடும் ஒட்டி நானாற்பது நாலைந்திணை யென்று கோடல்வேண்டுமென்றும், ஐந்திணை, யான்கூறியவாறு ஒருநூலுமன்று ஆசாரியரவர்கள்கூறுமாறு ஐந்நூலுமன்று, ஐந்திணைப்பொருளுணர்த்திய நான்குநூல்களென்று கொள்ளத்தக்கதென்றுஞ் சொல்ல ஏதுவாகின்றது. அங்ஙனமாயின், முப்பாலென்றது ஒரேநூலாகவும், இன்னிலைசொல்லென்றது இன்னிலை, இன்சொல் என இரண்டுநூல்களாகாது காஞ்சிக்கு விசேஷணமாகவும் கைந்

நிலை என்றது வேறொரு தனிநூலாகவும் கொள்ளல் தகும். இவ்வாறு கொள்ளிற் கைந்நிலையோடாங்கீழ்க் கணக்கு" என்று ஈற்றடிப்பாடம் திரிதல் வேண்டும். எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்குக்களுள் இன்னும் அச்சில்தோற்றாதன தேடிவெளிப்படுத்தும்நோக்கமாகச் சிலநாட்களுள், மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர் முதலிய தேசங்களுக்கு ஒரு யாத்திரைசெய்ய உத்தேசித்திருக்கிறேன். அவ்வாறு போய்த்திரும்பியபின் இதுவிஷயத்தைப்பற்றி மறுபடியும் எழுதுவேன்." (இலக். விளக். பதிப்புரை—16-18)

என்று விடைபிறுத்தனராயினும், அதன்பிறகு இவைதாம் கீழ்க்கணக்குநூல்களென்று கூறவில்லை.

III. சென்ற 1916-ம் ஆண்டு மூன்றும் முறையாகத் தாம் பதிப்பித்த ஆசாரக்கோவையின் முகவுரையில், எனதுநண்பருள் ஒருவரான காலஞ்சென்ற தி. செல்வக்கேசவராயமுதலியாரவர்கள் பதினெண்கீழ்க் கணக்குவிளக்கம் என்ற தலைப்பின்கீழ்ப் பின்வருமாறு எழுதினார்கள்.

" 'வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே அடிநிமிர் வின்றே'

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் 236ம் சூத்திரத்தின் உரையில் 'சிலவாக என்பது எண்ணுச்சுருங்குதல். மெல்லியவாய்ச் சிலவாய சொற்கள்: எழுத்தினல் அகன்றுகாட்டாது சிலவெழுத்தினால்வருவது. அடிநிமிராதென்றது ஐந்தடியின் ஏறாதென்றவாறு. தாயபனுவலோடென்றது இலக்கணஞ்சொல்ல எடுத்துக்கொண்ட அறம், பொருள் இன்ப மென்னு மூன்றுமன்றியும் வேறு இடையிடை தாய்ச்செல்வது என்றவாறு. அஃதாவது பதினெண்கீழ்க்கணக்கு என வுணர்க. அதனுள் ஐந்தடியானும் இரண்டடியானும் ஓரோசெய்யுள் வந்தவாறும் அவை சிலவாய மெல்லியசொற்களால் வந்தவாறும் அறம் பொருள் இன்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிப் பாட்டுப் பயின்றுவருமாறும் கார்நாற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறும் கண்டுகொள்க' என்பது உரைத்திருக்கின்றது."

என்று எழுதிவிட்டுக் கீழ்க்கணக்கு: 1 நாலடி, 2 நான்மணிக்கடிகை, 3 இனியவை நாற்பது, 4 இன்னாநாற்பது, 5 கார்நாற்பது, 6 களவழி நாற்பது, 7 ஐந்திணையம்பது, 8 திணைமொழியைம்பது, 9 ஐந்திணை யெழுபது, 10 திணைமாலைநூற்றைம்பது, 11 முப்பால், 12 திரிகடுகம், 13 ஆசாரக்கோவை, 14 பழமொழி, 15 சிறுபஞ்சமூலம், 16 இன்னிலை, 17 முதுமொழிக்காஞ்சி, 18 ஏலாதி என்பவை என்றும் எழுதினார்கள்.

IV. அதே யாண்டில், சிவபாதமென்பார், செந்தமிழ்ப் பதினேந் தாந்தொகுதி உஉஎ-உகூஉ பக்கங்களில் பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் நாலடி, நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழிநாற்பது, இன்னா நாற்பது, இனியவைநாற்பது, ஐந்திணைஐம்பது ஐந்திணைஎழுபது, திணைமொழிஐம்பது, திணைமாலைநூற்றைம்பது, திணைமாலை, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி எவ்பன என்றும், தொகைநூல்களைப்போன்று இவை பதினெட்டென்றேகோடல்பொருத்தமுடையதென்றும், ஐந்திணையென்பதற்கு நால்ஐந்திணை யென்று பொருள்கொள்ளுதல் மாறுபட்டதென்றும், ஐந்தொகையென்றொரு பாடமிருப்பதால் ஐந்து திணை நூல் என்றுகொள்வதே சாலச்சிறந்ததென்றும், 'ஐந்திணையை நான்குநூல்களாக்கிக் கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற்சேர்க்கவேண்டு மென்று விரும்பினவர்களே, வலிந்தும் நலிந்தும் நால் என்பதனை ஐந்திணையுடன் சேர்த்து நான்குநூல்களுடன் பொருள்செய்து காஞ்சியுடன் என்பவே என்னும் சொற்களின் ஆற்றலையும், செய்யுள் ஓசையின்பத்தையுஞ் சிறிதுங் கவனியாது 'கைந்நிலையோடாங்கீழ்க்கணக்கு' என்று பாடத்தையுந் திருத்திக்கொண்டார்கள் என்றும், ஓடு அல்லது உடன் பின்னர் ஈற்றுநூலாகிய ஏலாதியைச் சேர்த்து என்பவே என்னும் முற்றுச் சொல்லைக் கூறியபின்னரும் வேறுநூலை ஆசிரியர் கூறினர் என்பது பொருந்தாதென்றும், அதற்குப் பொருள் மக்களுக்கு உறுதிபயக்கும் நூல்களாகையான் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டுவது இன்றியமையாததென்பது ஆசிரியர் கருத்தென்றும், ஐந்திணைப் பாடல்களிற் சில நம்பியகப்பொருளிற் பயின்றுவருகின்றனவென்றும், மகாமகோபாத்தியாய ஐயாவர்களும் ஐங்குறுநூற்று முகவுரையில் "திணைமாலைப்பைக் குறித்திருக்கின்றார்களென்றும், இன்னிலையைச் சேர்த்தற்கு இடையூறாக நிற்பது எண்கொள்ளாமையும், 'இன்னிலையகாஞ்சியுடன்' என்ற பாடத்திற்கு முரணுதலுமாமென்றும், மேலேகாட்டியநூல்களே பதினெண்கீழ்க்கணக்குநூல்களென்றும் வெளியிட்டுள்ளார்கள்.

V. பிங்கள ஆண்டு (1917-18) வெளியான இன்னிலைமுகவுரையில் திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்,

"கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு; அவை: நாலடிநானூறு, நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, இன்னாநாற்பது, களவழிநாற்பது,

கார்நாற்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள் என்னும் முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முது மொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவாம். இவையே கீழ்க்கணக்கென்பது,

> "நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி—மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பாவால் விளங்கும். இவ்வெண்பாவில் 'நாற்பது' என்பதற்கு முன்னுள்ள 'நால்' என்பதனை 'ஐந்திணை' என்பதனோடும் கூட்டி 'நால்ஐந் திணை' எனக்கொண்டு அதற்கு ஐந்திணைகளையும்பற்றிக் கூறும் ஐந்திணை யைம்பது முதலிய நான்கு நூல்களு மெனவும் 'சொல்காஞ்சி' என்பதற்கு 'முதுமொழிக்காஞ்சி' எனவும் 'கைந்நிலையவாம்' என்பதற்கு ஒழுக்கத்தைப் பற்றிக்கூறும் நூல்களாம் எனவும் உரைத்துக்கொள்க. இவ்வெண்பாவி லுள்ள அடைமொழிகளின் சுருக்கத்தையும், இவ்வெண்பாவின்கிடக்கையை யும் இவ்வெண்பாவின் மோனைகளையும் உற்றுநோக்குவார்க்கு 'இன்னிலை' என்பதனைக் காஞ்சி யென்பதற்கு அடைமொழியாகக்கொள்ளுதலும், **காஞ்சியுடன் ஏலாதி என்பவே** என்பதற்குப் பின்னுள்ள 'கைந்நிலைய' என்பதிலுள்ள 'கைந்நிலை, என்பதனை ஒருநூலெனக்கொண்டு அதனைப் பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றாகக் கொள்ளுதலும், 'இன்னிலைசொல்' என்பதற்குப் பதிலாக 'மெய்ந்நிலைய' என்ற பாடத்தைக் கொள்ளுதலும் 'கைந்நிலைய' என்பதற்குப் பதிலாக 'நன்னிலைய' வென்ற பாடத்தைக் கொள்ளுதலும் பொருந்துவனவல்லவென்பது நன்குவிளங்கும்."

என்று எழுதியுள்ளார்கள்.

VI. செந்தமிழ்ப் பத்தொன்பதாந்தொகுதியில் (பக்கம். கஉஉ- கஉரு) திரு. தி. நா. சுப்பிரமணிய ஐயரவர்கள் நாலடியாரின்காலம் என்ற தலைப்பின்கீழ், நாலடியிலுள்ள **தாளாண்மை 10**-வது செய்யுள், **மானம் 6**-வதுசெய்யுள், இவ்விரண்டிலும் கூறப்பட்ட பெருமுத்தரையர் என்னும் சிற்றரசர்பெயரைக்கொண்டு நாலடியார் கி. பி. 717-க்குப் பிற்கே இயற்றப்பெற்றதாகும் என்றும், இதற்குரியகாரணங்கள் இந் நூல் ஜைநரால் தொகுக்கப்பட்டும் பல ஜைநமுனிவரால் இயற்றப்பட்டு மிருப்பது; அம்மதத்தினர் பல்கிச் சங்கமுதலியனநிறுவித் தமிழை வளர்த்தது இக்காலமே; என்றும் எழுதியுள்ளார்கள்.

VII. தமிழருரிமைநூற்ருெடரின் பதிப்பாசிரியரான திருவாளர் ஞா. சா. துரைசாமிப்பிள்ளையவர்கள் தமது தமிழ்இலக்கியம்-சங்க காலம் என்னும் நூலில் பதினேண்கீழ்க்கணக்கு என்ற தலைப்பின்கீழ்,

"கடைச்சங்கத்தில் அரங்கேறிய நூல்களுள் பதினெண்கீழ்க்கணக்கும் அடங்கு மென்பர்.

"அகவலுங் கலிப்பா............கொளலே" (பன்னிருபாட்டியல் 344)

"அடிநிமிர்...............கீழ்க்கணக்காகும்" ( ஷை 346)

என்பவை முதலிய பன்னிருபாட்டியற்சூத்திரங்களால், கீழ்க்கணக்கென்பது ஐம்பதிற் குறையாதும் ஐந்நூற்றின் மேற்படாதும் வெண்பாக்களினலாகிய அறம், பொருள் இன்பங்களைப்பற்றிக் கூறும் நூல்களுக்கு வழங்கும் பெயரென வறியலாம். எனினும், ஐம்பதிற் சிறிது குறைந்து நாற்பதுசெய்யுட்களையுடைய நூல்களிற் சிலவற்றையும் ஐந்நூற்றின் ஏறிய செய்யுட்களையுடைய நூலையும் முன்னோர் கீழ்க்கணக்கினுள் அடக்கிக்கூறியுள்ளார்.

கடைச்சங்கத்தில் அரங்கேறியனவாகப் பாராட்டப்படும் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டென்பது, 'நாலடி...............கீழ்க்கணக்கு' என்னும் வெண்பாவால் தெரியவருகின்றது, இவ்வெண்பாவின் ஈற்றடி இரண்டும் பாடபேதமாய்ப் பல நூல்களிற் பலவாறு வழங்குகின்றன.

'இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே
நன்னிலைய தாகுங் கணக்கு' எனவும்,

'இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு'

எனவும் வழங்குவது முண்டு. இச்செய்யுட்களிற்கூறப்பட்ட பதினெட்டு நூல்களுள், கீழ்க்கணக்குநூல்க ளென எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டன பன்னிரண்டு. அவையாவன:—

| | |
|---|---|
| 1. நாலடி. | 7. திரிகடுகம். |
| 2. நான்மணிக்கடிகை. | 8. ஆசாரக்கோவை. |
| 3. இனியவைநாற்பது. | 9. பழமொழி. |
| 4. இன்னநாற்பது. | 10. சிறுபஞ்சமூலம். |
| 5. கார்நாற்பது. | 11. முதுமொழிக்காஞ்சி. |
| 6. களவழிநாற்பது. | 12. ஏலாதி என்பனவே. |

எஞ்சிய ஆறுநூல்களைப்பற்றியும் பல்வேறு அபிப்பிராயங்களுள்ளன. மேற்காட்டிய வெண்பாவில் அபிப்பிராயபேதங்கொள்ள இடங்கொடுக்குஞ் சொற்கள் 'ஐந்திணை முப்பால்,' 'இன்னிலைசொல்,' 'கைந்நிலை'என்பனவாம்.

i. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தாம் வெளியிட்ட கலித்தொகைப் பதிப்புரையில் 'ஐந்திணையென்பது மாறன்பொறையனாரது ஐந்திணை ஐம்பதைக் குறிக்குமென்றும், 'முப்பால்' என்பது திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி பஞ்சமூலமாதியபோன்று நாலடிவெண்பாவானியன்று அக்காலத்திலே வழங்கிய மூன்று சிறு தருமநூல்களையென்றும், இன்னிலை சொல் என்றது இன்னிலை இன்சொல் என்னும் பெயரிய இரண்டு நூல்களின் பெயரே யென்றும் உத்தேசிக்கிறேன் என்றும் கூறியிருக்கின்றார்கள்.

இவர்கள் அபிப்பிராயப்படி கீழ்க்கணக்கு நூல்கள் மேற்கூறிய பன்னிரண்டும் 13 ஐந்திணை, 14, 15, 16 மூன்று சிறு தருமநூல்கள், 17 இன்னிலை, 18 இன்சொல் எனும் ஆறுமாம்.

ii. மற்றொருசாரார் 'ஐந்திணை'யென்பது நால்நாற்பது என்பது போல் திணைப்பொருளைக் குறிக்கும் ஐந்துநூல்களென்றும், முப்பாலென்பது திருக்குறளேயென்றும், தக்ககாரணங்காட்டிக் கூறுவர். இவர்கள் அபிப்பிராயப்படி கீழ்க்கணக்கு நூல்கள் முதற்கூறிய பன்னிரண்டும், 13 ஐந்திணையைம்பது, 14 திணைமாலை நூற்றைம்பது, 15 திணைமொழியைம்பது, 16 ஐந்திணையெழுபது, 17 திணைமாலை, 18 திருக்குறள் எனும் ஆறுமாம்.

iii. மற்றையோர் 'நானாற்ப தைந்திணை' எனும் தொடரில் நாலெனும் பதம் நாற்பதோமொத்திரமன்றி ஐந்திணையோடும் செல்லுமெனப் பொருள்கொள்வர். நான்கு ஐந்திணையாவன:—13 ஐந்திணையைம்பது, 14 ஐந்திணையெழுபது, 15 திணைமாலை நூற்றைம்பது, 16 திணைமொழியைம்பது என்பன. 17 முப்பாலாகிய திருக்குறள். 18 இன்னிலை."
என்று எழுதுகின்றார்கள்.

இவ்வபிப்பிராயமே தற்காலம் பெரும்பாலரால் கொள்ளப்படுவது.

மேற்காட்டியுள்ள பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் கடைச்சங்க காலத்திலேயே இயற்றப்பட்டனவல்ல. அவற்றுட் சில பன்னூறு ஆண்டு கட்குப் பின்னர் உண்டாயின. நாலடியார் எழுதப்பட்டகாலம் கி. பி எட்டாம் நூற்றாண்டாகும். களவழிநாற்பதின்காலமும் வெகுநாட் பிற்பட்டதே. இங்ஙனமிருப்பவும் கடைச்சங்ககாலநூல்களுள் இந் நூல்களைப்புகுத்தியது பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் கடைச்சங்ககாலத்தில் உண்டாயினவெனும் உலகுவழக்குப்பற்றியும், பதினெண்கீழ்க்கணக்கினுட் குறிக்கப்பட்ட நூல்களிற் பல கடைச்சங்ககாலத்திற்றானே இயற்றப்பட்ட காரணம்பற்றியுமேயாம்.

இவைகளே பதினெண்கீழ்க்கணக்குநூல்களைப்பற்றிய வழக்குக்கான அடிகள்.

சி. வை. தாமோதரம்பிள்ளை, தி. செல்வகேசவராயமுதலியார், சிவபாதம், வ. உ. சிதம்பரம்பிள்ளை, ஞா. ச. துரைசாமிப்பிள்ளை இவர்கள் கோள்கைப்படியான நூல்கள் கீழே காட்டப்படுகின்றன.

| எண். | சி. வை. தா. | தி. சே. | சிவபாதம். | வ. உ. சி. | ஞா. ச. து. | ஆசிரியர். |
|---|---|---|---|---|---|---|
| 1 | *நாலடி | நாலடி | நாலடி | நாலடி | நாலடி | தொகுத்தவர் பதுமனார் |
| 2 | நான்மணி | நான்மணி | நான்மணி | நான்மணி | நான்மணி | விளம்பிநாகனார் |
| 3 | இன்னா 40 | இனனா 40 | இன்னா 40 | இன்னா 40 | இன்னா 40 | கபிலர் |
| 4 | இனியவை 40 | இனியவை 40 | இனியவை 40 | இனியவை 40 | இனியவை 40 | பூதஞ்சேந்தன் |
| 5 | கார் 40 | கார் 40 | கார் 40 | கார் 40 | கார் 40 | கண்ணங்கூத்தன் |
| 6 | களவழி 40 | களவழி 40 | களவழி 40 | களவழி 40 | களவழி 40 | பொய்கை |
| 7 | ஐந்திணை 50 | ஐந்திணை 50 | ஐந்திணை 50 | ஐந்திணை 50 | ஐந்திணை 50 | மாறன்பொறையன் |
| 8 | ஐந்திணை 70 | ஐந்திணை 70 | ஐந்திணை 70 | ஐந்திணை 70 | ஐந்திணை 70 | மூவாதியார் |
| 9 | திணைமொழி 50 | திணைமொழி 50 | திணைமொழி 50 | திணைமொழி 50 | திணைமொழி 50 | கண்ணஞ்சேந்தன் |
| 10 | திணைமாலை 150 | திணைமாலை 150 | திணைமாலை 150 | திணைமாலை 150 | திணைமாலை 150 | கணிமேதாவியார் |
| 11 | முப்பால் | முப்பால் | திருக்குறள் | முப்பால் | முப்பால் | திருவள்ளுவர் |
| 12 | திரிகடுகம் | திரிகடுகம் | திரிகடுகம் | திரிகடுகம் | திரிகடுகம் | நல்லாதனார் |
| 13 | ஆசாரக்கோவை | ஆசாரக்கோவை | ஆசாரக்கோவை | ஆசாரக்கோவை | ஆசாரக்கோவை | பெருவாயின்முள்ளி |
| 14 | பழமொழி | பழமொழி | பழமொழி | பழமொழி | பழமொழி | முன்றுறையரையர் |
| 15 | சிறுபஞ்சமூலம் | சிறுபஞ்சமூலம் | சிறுபஞ்சமூலம் | சிறுபஞ்சமூலம் | சிறுபஞ்சமூலம் | காரியாசான் |
| 16 | ஏலாதி | ஏலாதி | ஏலாதி | ஏலாதி | ஏலாதி | கணிமேதையார் |
| 17 | முதுமொழிக்காஞ்சி | முதுமொழிக்காஞ்சி | முதுமொழிக்காஞ்சி | முதுமொழிக்காஞ்சி | முதுமொழிக்காஞ்சி | கூடலூர்கிழார் |
| 18 | கைந்நிலை | இன்னிலை | திணைமாலை | இன்னிலை | இன்னிலை | .................... |

* நூல்களை நிரலே காணவேண்டி அவரவர்கள் எழுதியமுறைப்படி குறிக்காது ஒருமுறையிற் குறித்துள்ளேன்.

இவ்வடைவினுள்ளே சி. வை. தாமோதரம்பிள்ளைகொண்டநூல் களின்பெயர் இவைதாமெனத்துணிந்தது இலக்கணவிளக்கப்பதிப்புரை கொண்டேயாம். இப்பதிப்புரையைக்கண்ணுறாமையாலோ வேறுகாரணத் தாலோ துரைசாமிப்பிள்ளையவர்கள் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் கொண்ட நூல்கள் வேறெனக்காட்டினார்கள் இவ்வியாசத்தொடக்கத்தில் அவர்கள் இறுதியாகக்கொண்டவை இவையெனக்காட்டப்பட்டிருத்தலின் அவையே ஈண்டு எடுத்தாளப்பட்டன.

இனி இந்நூல்களுள், காலத்தாற் பிற்பட்டனவும் சேர்க்கப்பட் டிருக்கின்றன என தி. நா. சுப்பிரமணியஐயரவர்களும் சங்ககால இலக்கியநூலாசிரியரும் கூறியுள்ளார்கள். முதன்முதல் நாலடியைப் பரிசோதனைசெய்து அது எவ்வாறு பதினெண்கீழ்க்கணக்குநூல்களிற் சேர்ந்ததென்ற வினாவையெழுப்பியவர் தஞ்சை போதனாமுறைக்கலா சாலையுபாத்தியாயர் T. S. குப்புசாமிசாஸ்திரிகளாவர்*. பின்னர் மேற் கூறிய இருவரும் எழுதலாயினர். ஆயினும், அதற்கு இதுவரை ஏற்ற விடையிறுத்தார் யாருமிலர்.

நாலடியின் 200, 296வது வெண்பாக்களிற்கூறப்படும் முத்தரையர், பல்லவர்காலத்தின் இறுதியில் இருந்ததாகச் சரித்திரஆராய்ச்சி காட்டுவ தால், கி. பி. எட்டு, ஒன்பதாம்நூற்றாண்டிலான நூலொன்று மிகமிகப் பழையகாலத்து நூல்களோடு சேர்த்தெண்ணப்பட்டதென்பது பொருந் தாக்கூற்றேயாம். எனினும், பதினெண்கீழ்க்கணக்கு இவையெனக் காட்ட எழுந்த வெண்பாவின் முதலில் 'நாலடி' என்ற சொல் உளதே யென்பீராயின், பேராசிரியரது தொல்காப்பியஉரையை ஊன்றிப்படிப் பார்க்கு இது உண்மை புலனாகாதுபோகாது என்பேன். பேராசிரியர் தொல்காப்பியம் செய்யுளியல் உ௩௬ம் சூத்திரத்திற்குப் பொருளுரைக்கு முகத்தானே,—

" 'தாயபனுவலோ' டென்றது அறம், பொருள், இன்பமென்னும் மூன்றற்கும் இலக்கணம் சொல்லுப வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச்செல்வதென்றவாறு. அஃதாவது பதினெண்கீழ்க்கணக்கென வுணர்க. அதனுள் இரண்டடியானும், ஐந்தடியானும் ஓரோசெய்யுள் வந்தவாறும் அவை சிலவாய மெல்லியசொற்களான் வந்தவாறும், அறம்

---

*செந்தமிழ்த்தொகுதி-௧௦. பக்-௧௩௭-௨௦௧, ௨௨அ-௨௨௧, ௨அ௬-௨அஅ.

பொருள் இன்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்று வருமாறுங் கார்நாற்பது, களவழிநாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டுகொள்க"* என்பர்.

இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள்வந்தவாறும் என்றெழுதியதனுன் இப்பதினெண்கீழ்க்கணக்குமுழுமையும் இத்துணையடிகளாலயவை என்பது உரைமுகத்தாற் பெறுகின்றும். அவ்வடிகளின் வரையறை எதுவென ஊன்றிச் செய்யுளைக் கருதுவோமாயின் நாலடி என்பது புலப்படும். இக்கூற்றைக் கண்டவுடன் பலரும் எள்ளுவர். ஆயினும், எள்ளலை நிறுத்தி, நடுநிலை என்னுங் கண்ணடிகொண்டு நுனித்தறிவார்களாயின், நான்மணிக்கடிகை முதலாய நூல்களெல்லாம் நான்கடியானேயாக்கப்பட்டவை யென்பதையும் மனத்திருத்துவார்களாயின், இரண்டு ஐந்து அடிகளாற் சிலசெய்யுள்களே அருகிக் காணப்படுவன என்பதையும் நினைவிற்குக்கொண்டுவருவார்களாயின் யான்கூறுவதிலும் ஒருவாறு உண்மையுண்டென அறிவர். அவ்வாறு கொள்ளாக்கால், கி. பி. எட்டு ஒன்பது நூற்றுண்டி லியற்றப்பட்ட நூலும் பதினெண்கீழ்க்கணக்காயவா றென்னையோவென்று இடர்ப்படுவர். இப்படிப்பட்ட பொருந்தாவுரைகளாற்றுன் காலவாராய்ச்சியாளருட் சிலர் கடைச்சங்ககாலம் கி. பி. 7-8-ம் நூற்றுண்டெனக்கூறி யல்லற்படுவர். இத்துணைத் துன்பிற்கும் இடந்தருவது இங் நாலடி என்னுங் தொடர்மொழி.

பேராசிரியரே முற்கூறிய சூத்திரவுரையிலே 'அடிநிமிராதென்றது ஐந்தடியின் ஏறுதென்றவாறு' என் றெழுதுவதனுலேயும், 'மிறண்டும் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் தோன்றுவது வழூவாகா' தென்று கருத்துப்பட எழுதுவதானும் இது பின்னரும் வலிபெறுகின்றது.

இனி, வேறொருவகையாக ஆராய்வாம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின்ஆசிரியராவார் இவரெனக்காட்டினும். அவ்வடைவினருள் ஒவ்வொருவரும் நூல்முழுவதும் இயற்றியி நக்கின்றனரேயன்றிப் பலர்

---

* இது அச்சுப்பிரதியிற்கண்டது. ஓலைச்சுவடியில் வேறுபாடிருப்பின், பின்னர்க் காட்டப்படும். சோம.

கூடிச்செய்தது ஒன்றுமில்லை. அற்றாக நாலடிமட்டும் அவ்வாறன்றிப் பலராற்பாடப்பட்டுப் பதுமனாற் றொகுக்கப்பட்டது என்பது உலகறிந்த செய்தி. இவ்வாறு தொகுக்கப்பட்டநூல்களையன்றோ எட்டுத் தொகையென்றது. அன்றித் தனித்துவந்த ஒருபாவைப்போன்று பல கொண்டதையன்றோ பத்துப்பாட்டென்பது. இதனானே பதினெண் கீழ்க்கணக்கினுள், தொகைநூல் சேரக் காரணமின்று மென்பதை யூகித் தறியலாம்.

இதைவிட்டு ஆசிரியர்களின்சமயத்தைநோக்குவோமாயின் அவை, பொன்வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ணமேனியானையாவது, நறுந் துழாய்முகுந்தனையாவது, இவ்விருகடவுளரோடு, திசைமுகத்துப் பண்ணவனைச் சிறைசேர்த்தகுரிசிலையாவது தெய்வமாகவழிபடுவோரது சமயமாயிருக்கின்றனவேயன்றிப் புறப்புறச்சமயமாகியஜைனமன்று. இக் காரணங்கொண்டும் நாலடி பதினெண்கீழ்க்கணக்குநூல்களிற் சேர்த் தெண்ணப்படுவதற்கில்லை யெனலாம், எவ்வாறுநோக்கினும் இடையூறு உண்டாவதுகொண்டும், அந்நூலிலுள்ள சரித்திரச்சான்றுகொண்டும் இந்நாலடி பதினெண்கீழ்க்கணக்கி லொன்றன்று என்று துணியலாம்.

இனி, நாலடியைப் பதினெண்கீழ்க்கணக்குநூல்களினின்று நீக்குவோமாயின், பதினெட்டுநூல்கள்தாம் யாவை யென்ற தடை யுண் டாகும். நானாற்பது என்பது நாற்பதுபாக்களையுடைய நான்குநூல் களைக்கூறுவதுபோன்று ஐந்திணையென்பதற்கும் திணைகளைப்பற்றிக் கூறும் ஐந்துநூல்களென்றே கொள்ளுதல் சால அமைவுடைத்தாம். இவ்வாறுகொள்ளினும் பதினெட்டுநூல்களாகாது பதினேழுநூல்களே யாம். பதினெட்டாவது நூல் இன்னிலையா கைந்நிலையா வென்ற ஐயத் தைத் திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களும்* திருவாளர் சிவபாதமும்† அற நீக்கியுள்ளார்களென்றேகூறலாம். ஆயினும், ஐம்பது கீழெல்லையாக ஐந்நூறு மேலெல்லையாகவுடையதன்றோ கீழ்க்கணக்கின் பாற்படும்; இன்னிலையோ நாற்பத்தைந்துசெய்யுட்களையுடையது; இதற்குமாறாகக் கைந்நிலை திணையொன்றுக்குப் பன்னிரண்டுசெய்யுட்களை யுடைய ௬0-பாக்கள்கொண்ட ஒருநூலாகும். எனின் இக்கூற்றுக்கு

* இன்னிலைமுகவுரை.

† செந்தமிழ்த்தொகுதி கரு.

முரணுய்நிற்பன இரண்டு. அவற்றுள் ஒன்று ஏலாதியேன்பவே என்னும் மூன்றுமடியின் நான்காஞ்சீரிலுள்ள ஏகாரம். பேராசிரியர் கார்நாற்பது களவழிநாற்பதுமுதலாயின வந்தவாறுங் கண்டுகொள்க என்பது மற்றொன்று. இவ்வேகாரத்தைப்பற்றித் திருவன் சிவபாதம் அதிக மெழுதியுள்ளபடியால் மேலு மெழுதவேண்டுவதில்லை. இக்கூற்றை யாவரும் ஒப்புவார்களென்பதில் ஐயமின்ருகலின் அடியேனும் அவ்வாறே கொள்வேன். ஆகவே, நூல்கள் பதினெட்டாயவாறு காண்க. அவை யாவன:—நாண்குஅடி (களைப்பெரும்பான்மைபாகவுடைய, நான்மணிக்கடிகை, நான்குநாற்பது, ஐந்துதிணை நூல்கள், முப்பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம், இன்னிலை, காஞ்சி, ஏலாதி என்பவே.

முடிவாக யான் கூறவேண்டியதொன்றுண்டு. இதுகாறுங்கூறியவை யாவாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்ருவது வீழ்த்தப்படக்கூடாத தென்ருவது யான் சொல்லவரவில்லை. இப்பதினெண்கீழ்க்கணக்குநூல் முரண் எவ்வாறு உண்டாயிற்றென்று ஆதிபோடந்தமாகக்கூறி, அதனுலுண்டாகும் நன்மைதீமைகளைச் சுட்டியும் இவ்விதமாகத்தான் கொள்ளவேண்டியிருக்கிறதென்றும் எடுத்துக்காட்ட முற்பட்டேனேயன்றி வேறொன்றுமன்று. யான் கூறியகூற்றுக்களில் ஒவ்வாதனவும் முரணுடையனவு மிருப்பின் அவற்றைப் பெரியோர் இப்பத்திரிகைமூலம் வெளியிடுமாறு பன்முறையும் வேண்டுகின்றேன்.

இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை:

திருவாரூர்—சோமசுந்தரதேசிகர்.

உ

## பிழைதிருத்தம்.

---

இப்பகுதியின் ௬அ-ம் பக்கம் உ௫-ம் வரியில், சழ்ந்து என்றிருப்பதைப் புகழ்ந்து எனவும் ௧0௬-ம் பக்கம் உ௩-ம் வரியில் தந்தவ என்றிருப்பதைத் தந் தவ எனவும் திருத்திக்கொள்க.

---

# கம்பர் திருநாள்.

திருநெல்வேலித் தமிழிலக்கியசங்கத்தினால் பங்குனி மீ 15, 16-ம் தேதிகள் கம்பர்திருநாளுக்காகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 15-ம் தேதி (28—3—26) பங்குனிஉத்தரமாகிய நன்னாள்; சீதாகலியாண மஹோத்ஸவதினம். 16-ம் தேதி (29—3—26) பங்குனியத்தநன்னாள்; கம்பராமாயண அரங்கேற்றத்திருநாள்.

இத் திருநாள்விழா திருநெல்வேலி இந்துகலாசாலையில் நடைபெறும். சேது ஸமஸ்தான வித்துவானும் தமிழ்ப்பெருங்குரவரும் 'மஹாவித்துவான்' எனத் தமிழ்ப்பெருமக்களாற் கொண்டாடப்பெற்றவரும் இராமாயணத்திற் பேராராய்ச்சியுடையவருமாகிய ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் தலைமைவகிக்க இணங்கியிருக்கின்றார்கள். பேறிஞர்பலர் கம்பர்பெருமானது புலமையைக்குறித்துப் பேசுவார்கள்.

இவ் விழாவிற்குத் தமிழ்மீதும் கம்பர்மீதும் பற்றுடையாரனைவரும் வந்து திருநெல்வேலித் தமிழிலக்கியசங்கத்தைக் கௌரவிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

தமிழ்நாடெங்கும் இக் கம்பர்திருநாள் விசேஷமாய்க் கொண்டாடப்பெற்றுவரவேண்டுமென்பதே எங்கள் பிரார்த்தனை.

தமிழிலக்கியசங்கத்தார்,

திருநெல்வேலி.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உ௩-ம் தொகுதியின் ௪௧௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

[தம்மிடம் வந்த வசிட்டமுனியை, அரசர்கள், அழுகுரற்குக் காரணம் யாதென, அவன், "அரசனிடம் கைகேசி யிரண்டுவரங்கொண்டாள். அவைகளால் இராமன் காடேகவும் பரதன் அரசாகவும் பெற்றாள்' என்றான்.

அதுகேட்ட அரசரும் அந்தணரும் தசரதனைப்போல வருந்தினார்கள். காற்றடித்துக் * கண்ணீர்சிந்தி, வண்டுகள் ஒலிக்க மலர்களை உதிர்த்துப் பூமியில் விழுந்து புரளும் பூங்கொடிகள்போல, மாதர்கள் பெருமூச்செறிந்து, விழிநீர் சொரிந்து, அலறிஅழுது, அணிகளைச் சிதறி விழுந்து புரண்டார்கள். அந்நகரத்தாருள்ளே பலர், அரசன் அருள்நீங்கி அறத்தைக் காவாமற் கைவிட்டான்; ஆதலால் நாமும் அறத்தைக் கைவிடுவேமென்று வருந்தி மண்ணில்விழுந்து அரற்றினார்கள்: வேறுபலர், தசரதனை 'இராமனுக்குக் காடுகொடு' என்று கேட்ட கைகேசியும் அவளை அவ்வாறு கேட்கச் சொன்ன கூனியும் போன்ற கொடியார் உலகந்தோன்றியநாள்தொட்டு இன்றுகாறும் இலரென்றார்: மற்றும் பலர், இராமன் வனம்போதல்கேட்டும் மாளாத நம்மினும் வன்மையுடையாரில்லை யென்றார்: மறித்தும் பலர், இராமனோடு நாமும் வனம்புகுவேம், அன்றேல் எரிபுகுவேமென்றார்: பின்னும் பலர், 'கோசலை பிழைப்பாளோ! இலக்குவன் பொறுப்பானோ! வென்றார்: பெயர்த்தும் பலர், இராமன் மகுடம்புனைதலைக் காணாமல் வனம்புகுதலைக் காண எங்கள்கண்கள் என்னபாவம் செய்தனவோ வென்றார்.]

265 "பெற்றுடைய மண் அவளுக் கீந்து, பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறைதும் யாரும்; உறையவே, சின்னாளில்,
புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போ" மென்றார்.

*கள் நீர்—தேன்.

இ. ள். "(தந்தையாகிய தசரதன்கொடுக்கத் தான்) பெற்று (த் தனக்கு) உரியதாயிருந்த பூமியைக் கைகேசிக்குக் கொடுத்து (விட்டானுயினும், தசரதனுக்குத் தலைமகனாக)ப் பிறந்து (அதனால், சேட்டபுத்திர பாரம்பரியபாத்தியமென்ற பிறப்புரிமையால், வேறொருவருக்கும் பாத்தியப்படாமல், தந்தையாயினும் தானுயினும் பிறர்க்குக் கொடுக்க லாகாததாய், வேறெவர்க்கும் பொதுவாயில்லாமல், தான் ஒருவனுக்கே சொந்தமான) உலகமுழுவதையும் உடைய இராமனை (நாம்) எல்லாரும் நெருங்கிக் கூடி (அவனுடன்) வனத்தை அடைந்து வசிப்போம்: (அவ்வாறு) வசிக்கவே, சில நாளில் (இப்போது மனிதசஞ்சாரமில்லாத, பாம்புப்) புற்றுக்களை (மிகுதியாக) உடைய காடுமுழுதும் (நம்மால் ஆக்கப்பெற்ற நெல்வயல்கள்வளைந்த நெடுநகர்கள்மலிந்த) நாடாகிப்போம் (கைகேயி பெற்ற நாடெல்லாம் காடாகிப்போம்)" என்றூர்கள் (பலர்).

'ஈந்தும்' என்ற பாடம் இல்லையாயின், 'ஈந்து' என்பதன்பின் 'உம்மை' தொக்கதாகக் கொள்க. இந்நூலில் 'உம்மை' சில இடங்களில் தொக்குவருதலும் சில இடங்களில் இசைநிறை அசைநிலையாக மிக்கு வருதலும் காணலாம்.

'பிறந்துலகம் முற்றுடையகோ' என்பதன்பொருள், கிளைகண்டு நீங்குபடலத்திற் பரதன் இராமனைநோக்கிப் 'பிறந்துநீயுடைப் பிரிவில் தொல்பதம்' என்பதனால் நன்குவிளங்குதல் காண்க.

'புற்றுடையகாடு' என்றதனால், அக்காடுகளில் உயிர்களுக்கு அபாயம் விளைக்கும் பாம்புகளுண்மை குறிப்பித்தார். அக்குறிப்பால், அப்பாம்புகள்போலப் பிராணுபாயமான புலிமுதலிய துட்டமிருகங்களுண்மையும் உய்த்துக்கொண்டுணரவைத்தார்.

266 "என்னே நிருபர் இயற்கை இருந்தவா!
தன்னேர் இலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்" என்டார்.

இ-ள். அரசர்தன்மை இருந்தவாறு என்னே! முதற்குமாரனுக்குப் பூமியை முன்பு கொடுத்துவிட்டுப் பின்பு, (கொடுத்ததைத் திரும்ப

வாங்கும் குற்றமேயன்றி அந்தப்பூமி தலைமகற்குரிமையாம் குல) முறை (யும்) பிறழ (அதனை அவன்) தம்பிக்குக் கொடுத்தால், உண்மைதவ ருதோ! என்றார் (பலர்).

'இருந்தவா' 'இருந்தவாறு' என்பதன் விகாரம். 'தனிமகற்கு' என்றும் பாடம். தனி-ஒப்பில்லாத.

வேண்டியபோது இரண்டுவரங்கள் தருவேனென்று தசரதன் கைகேசிக்கு வாக்களித்திருந்தான். அவைகளை அவள்வேண்டுமுன், இராமனுக்கு நாட்டைக்கொடுத்தான். கொடுத்தபின், அவள் தனக்குத் தந்திருந்த வரங்களுள் ஒன்றை நிறைவெற்ற, அந்த நாட்டையே கேட்டால், எவ்வாறு கொடுக்கலாம்? எவரும் தம் பொருள்களுள் ஈந்தவை போக எஞ்சியபொருளை ஈதலே முறைபாம், ஒருவர்க்குக் கொடுத்தபொருளைத் திரும்பவாங்குதலும் அப்படிவாங்கியதை வேறொருவர்க்குக் கொடுத்தலும் முறையாகா. இதற்குமாறுகத் தசரதன்செய விருக்கின்றது. ஆதலால், பொதுமக்கள்தருமம்வேறு, அரசர்தருமம் வேறு போலும். இத்தகைய தருமத்தையுடைய இராசரியல்பை என்னென்பேம்! இராமனுக்குக் கொடுத்ததை வாங்கித்தந்து தனக்குக் கொடுத்தவரத்தை நிறைவேற்றச்சொல்லிய கைகேயி சொற்படி செய்யாமை உண்மை தவறுதலாகாது; ஆகுமென்றால், கிரமமாக உரியவனை மூத்தமகனுக்கு இராச்சியத்தை முன்புகொடுத்துப் பின்பு அவ்விராச்சியத்தை அக்கிரமமாக இளையமகனுக்குக்கொடுப்பது அந்த உண்மைதவறுதலினும் அதிகமாக உண்மை தவறுதலாகாதோ! என்ற விரிந்த கருத்துக்கள் இனிது விளங்க இப்பாட்டிற் சுருக்கமாகக் கூறியிருக்கும் நயம் கொண்டாடு தற்குரியது.

[கைகேசி தசரதனை இராமனுக்குக் கொடுத்த நாட்டை மீட்டுத் தனக்குக் கொடுத்து அவனைக் காட்டுக்கோட்டச்செய்தாளென்று கேட்ட மாத்திரையே, இலக்குமணன் கோபித்துக் கொதித்துக் குதித்து எழுந்து உலகத்தை ஒருமிக்க ஒழிவிக்கும் ஊழிமேகம்போன்று, விழிகளினின்று மின்னல்போல வெகுளித்தீ வெளிப்பட, மூக்கிலிருந்து அவ்வூழிமேகத்தை அலைக்கும் ஊழிக்காற்றுப்போல நெடுமூச்சுங் பெருங்காற்றுவீச, மெய்யினின்று மழைநீர்போல வியர்நீர்பெருக, "சிங்கக்குட்டிக்கிடும் ஊனை நாய்க்குட்டிக் கூட்டப்புகுதல்போல இராமனுக்குரிய இராச்சியத்தைப் பரதனுக்குக் கொடுக்கக் கைகேசி முயன்

ருளே!" என்று கர்ச்சித்துப் பெரிய இடிபோலப் பேரொலி பிறக்கக் கைகொட்டிச் சிரித்தான். வாளை அரையின்பக்கத்திலே கட்டி, வில்லைக் கையிலேந்தி, அம்புக்கூட்டை முதுகில் தொடுத்து, மெய்யில் கவசத்தை அணிந்து, வீரகண்டை ஒலிக்க வில் நாண் இடிக்க, இராமனொருவன் தவிர எவரையும் எதிர்க்கும் எண்ணத்தோடு போர்க்குப் புறப்பட்டான்.]

267 " புவிப்பாவை பரம் கெடப் போரில் வந் தாரையெல்லாம்
அவிப்பானும், அவித்தவர் ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கொரு கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்: இது காக்குநர் காக்க" என்றான்.

இ-ள். போரில் (எதிர்த்து) வந்தவ ரெல்லாரையும் (கொன்று) அழிப்பானும், அழிக்கப்பட்டவர் உடல்களை உலகம்முழுதும் (வெற்றிடமில்லையென்னும்படி) குவிப்பானும் எனக்கு ஏகநாயகனான இராமன் சிரத்தில் (என்) வெற்றி (யினாற்கிடைத்த) முடியைக் கவிப்பானும் (ஆகி)நின்றேன்: இதனைத் தடுப்பார் (எல்லீரும், வல்லீரேல்,) தடுப்பீராக எனறான் (இலக்குமணன்).

பரம் - பாரம். அவித்தல் - அழித்தல். 'அவித்து அவர்' எனப் பிரித்துக்கொண்டு பொருள்கூறலும் உண்டு. இராமன் ஒருவனன்றித் தனக்குத் தலைவரெவரு மிலரென்பதைப் புலப்படுத்த ஒருகோ என்றான். 'போருவந்தோரை' என்றும், 'கோனினை' என்றும் பாடங்கள் உள்ளன.

[இலக்குமணன், இவ்வாறு எல்லாரையும் போர்க்கழைத்துப் பாற்கடற்கண் மந்தரமலை சுழன்றதுபோல அயோத்திநகரிலே சுற்றித்திரிந்தான். அப்போது, மாற்றவள் செய்த வன்செயலுக்கு வருந்தித் தேற்றத் தெளியாது தியங்கிச் சோர்ந்திருந்த சுமித்திரைபக்கத்திருந்து தேற்றிக்கொண்டிருந்த இராமன், அண்டம்பிளந்தாற்போல அதிரும் இலக்குமணன் வில் நாண் ஒலியைச் செவியுற்றான். செவியுற்றவன், கரியமேனியில் அணிந்திருந்த கனகாபரணங்கள் மின்னல்செய்ய, காற்றால் மோதப்பட்டுக் கனன்று கதித்தெழுங் கனல்போன்ற தம்பி கோபத்தைத் தணித்தற்குக் குளிர்ந்த சொல்மாரிவழங்காநின்று, வானமேகம் பூமிமீது உலாவுதல்போலச் சென்று, "என் ஐய! இமையளவும் கோபித்தறியாத நீ போர்க்கோலம்பூண்ட காரணம் யாது?" என்றான். இலக்குமணன், மெய்ந்நெறிக்கு விரோதமாகக் குலமுறையைக் கெடுத்து, உனக்குரிய அரசை வஞ்சனையாற் கவர்ந்த கொடியாளெதிரே உனக்கு முடி

சூட்டக் கருதியுள்ளேன். தடைசெய்வார் தேவரேயாயினும் அவர்களை அழித்து உனக்கு அரசாட்சி அளிக்கின்றேன். கொள்வாயாக" என்ருன். இராமன் "நடுவுநிலைமையினின்று விலசாத நன்னெறியினுக்கும் உன்னறிவினுக்கும் என்ன வேறுபாடும் இன்றே. அவ்வாருகவும், உன்பால், அறம்துறைந்திட முறைபிறழ்ந்திட, மூனிவுபிறந்ததென்னே?" என்ருன். இலக்குமணன், நகைத்து "உன் தந்தை உனக்குத்தந்த உன் நாட்டை உன்பகை கவர்ந்துகொண்டு உன்னைக் காட்டுக்கோட்டும்போது, எனக்குக் கோபம் உண்டாகாதானல், அது எப்போதுதான் உண்டாகுவதோ? உன்பால் உள்ளன்பில்லார் உன்னைக் காட்டில் ஓட்ட, அதனைத் தடுத்தற்கு ஒன்றுஞ்செய்யாமல் உடலைப் பூமிக்கு ஒரு பாரமாகப் பயனின்றித் தாங்கியிருந்து உயிரை ஓம்புவேனே! என் கண்ணெதிரே இராச்சியத்தை உனக்கு ஈந்து, பின்பு, இல்லையென்ற இராசன் படும் பாட்டை இதோ, பார்ப்பாயாக!" என்ருன். இராமன், "அரசாட்சி துன்பம் அளிப்பதென் றெண்ணி அதனை விரும்பாத யான், அவ்வாறெண்ணுத அரசன் அதனை ஏற்றுக்கொள்ளென்றபோது ஏற்றுக்கொண்டேன். எங்களில் யானே குற்றமுடையேன். (இராச்சியத்தை யான் ஏற்றிலேனேல், இராசன் அதனை எனக்கடுத்ததம்பியாகிய பரதனுக் கீந்திருப்பான். யான் ஏற்றதனல் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் நிகழ்ந்திரா)" என்று பின்னும் கூறுவான்.]

268 "நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை; அற்றே
புதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை அன்று; மைந்த
விதியின் பிழை: நீ இதற்கென்கொல் வெகுண்ட"தென்ருன்.

இ-ள், "(எப்போதும் நீருள்ள ஆற்றில் ஒருபோது) நீர் இல்லாமை (அந்த) ஆற்றின் குற்றமன்று; அதுபோலவே, அரசன் (எப்போதும் என்னைப்பிரிதற்கு மனமில்லாதவன், இப்போது யான்பிரிந்து வனம் ஏக மனம் இசைந்தது, அவன்) குற்றமன்று; (அவனை அதற்கு இசையச்செய்தது) நம்மைப் பெற்று (வளர்த்துப்) பேணினவள் (ஆகிய கைகேசி அன்னையின்) அறிவின்குற்றமன்று; (அவள் ஆருக்காக அவ்வாறு இசையச் செய்தாளோ, அந்த அவளுடைய) மகன் (பரதன்) குற்றமுமன்று; (மற்று யான் வனமேகுங்குற்றந்தான் யார்குற்றமோ வெனின்,) விதியின்குற்றமே: இந்த விதியின்குற்றத்துக்கு (அவர்களை)க் கோபித்ததேனே?" என்ருன் (இராமன்).

நறுமை - நன்மை. அற்றே - அதுபோலவே (காஞ்சிப்பு. நாட்டுப்). "வறுமையுற்றுழியும்" என்ற ௯௩-ம் பாட்டில் 'அற்றே' அதுபோலவே என்னும் பொருளில் வருதல் காண்க. பதி - அரசன். பயந்து-ஈன்று. உண்மையாக, இராமனைக் கோசலையும் இலக்குமணனைச் சுமித்திரையும் ஈன்றாளாகவிருக்கவேயும், முன்னவன் பின்னவனைநோக்கிக் கைகேசியை "நமைப் பயந்து புரந்தாள்" என்றது உபசாரம். மைந்தன் - புத்திரன்; இங்கே 'இளையவன்' என்ற பொருள்படநின்றது. 'நறும்பெயல்' 'இதற் கென்னை' பாடபேதங்கள்.

இராமன் இலக்குமணனைத் 'தம்பி' என்னாது 'மைந்த' என்றது, முன்னவனுக்குப் பின்னவன்பாலுள்ள அன்பு தமயனுக்குத் தம்பி பாலுள்ள அன்பினும் சிறந்ததாய்த் தந்தைக்கு மைந்தன்பாலுள்ள அன்புபோன்றது என்பதைப் புலப்படுத்திநின்றது.

இந்தப் பாட்டு,—இராமன், தான் காட்டிற்குச்செல்வதற்கு மூல காரணம் விதியாயிருக்க, அதன்மீது சினம் செலுத்தாமல், அதனால் ஆட்டப்பட்டு அதன்வயத்தினராய் அதன்கட்டளையை நிறைவேற்றுவா ராகிய கைகேசி முதலியோரைச் சினத்தல், எய்தாரை நோவாமல் அம்பை நோதல்போல, அறிவுடைமையாகாதென்றும், அவ்விதியை நோதலும், குற்றம்செய்து சட்டப்படி தண்டிக்கப்பட்டானொருவன் தன்னால் யாதொரு தீங்கும் செய்பவொண்ணாத அச்சட்டத்தை நோதல்போலப் பயனற்றசெயலாமென்றும் உணர்ந்து இலக்குமணன் சினமாறும்படி அவன் உள்ளம் கொள்ளக் கூறியதாகக் கொள்ள உள்ள பொருள் பொதிந்ததாய்,—ஆற்றின் ஈரமின்மை அதன் பிழையென்று அதனை வெறுக்கலாகாததுபோலக் கைகேயி முதலாயினோர் இராமனைக் காட்டுக் குச் செலுத்தும் ஈரமின்மை அவர்கள்பிழையென்று அவர்களை வெறுக்கலாகாதென்பதில் ஒன்றுக் கொன்று ஒன்றுபட்ட ஒற்றுமை யுடைய உவமான உவமேயங்கள் உள்ளதாய்,—ஊன்றி உணருவார் உள்ளத்துள்ளே உணருந்தோறும் உணருந்தோறும் உவட்டா உவகை உவட்டெடுக்க ஊறுமா றுள்ள உயர்நய முடையதா யுள்ளமை உய்த் துணர்தற்குரியது. [தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.